695

# ஜகன்மோகினி

ஆசிரியை:
வை. மு. கோதைநாயகி அம்மாள்

OFFICE OF THE RE...
2 MAY 1938




பிப்ரவரி 1938

## வாழ்க்கையின் நாதம்

அல்லது வானக் குயில் (தொடர்ச்சி)

அணா 2

வெற்றி !   வெற்றி !!

எம். கே. ராதா,   பி. யு. சின்னப்பா,   டி. ஏ. சுந்தராம்பாள்

நடிக்கும்

இவ்வருஷத்திய உன்னத தமிழ்ப் பேசும் படம்.

ORPHAN GIRL




படப்பிடிப்பு :—கமால் கோஷ்.   ஒலிப்பதிவு :—பி. கே. விச்வநாத்.

"அனாதைப் பெண்" பாட்டுகளை
ஓடியன் ரிக்கார்டுகளில் கேளுங்கள்.

ஜூபிடர் பிக்சர்ஸ் லிமிடெட், திருப்பூர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-MAY 1938
MADRAS

ஸ்ரீராமஜெயம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து

—ஸ்ரீ வீராகவ கவி.



| மலர் 15 | ஈச்வர ஸு தை மீ பிப்ரவரி 1938 | இதழ் 2 |
| --- | --- | --- |



## கலைமகள் துதி

செங்கைத் தளிருஞ் செழும்பவள வேரிதழும்
கொங்கைக் குவடுங் கொடியிடையும்—துங்கப்
பிடிநடையும் நீலப் பெருவிழியும் கொண்டாள்
அடிமலராள் நின்றாள் அகம். 1

கலைமகளே நின்கழலைக் கைதொழுது வாழ்த்தும்
புலவர்தமைப் போற்றிப் புரந்தாய்—நலமில்லாப்
புன்மையேன் நின்னைப் புறக்கணித்தேனுதலினால்
வன்மனத்த னாயினேனே வந்து. 2

வறுமை யடைந்து வருந்தப் படைத்த
வெறிமலரான் செய்த விதியை—எறிதற்கு
வல்லமை யில்லாதேன் வணங்கினேன் நாமகளே!
செல்ல லொழிப்பாய் சிறிது. 3

—ஸ்ரீ. வீராகவ கவி.

# வெளிநாட்டுச் செய்திகள்

—:(O):—

## ஸ்பெயின் யுத்தம்

டெருல் என்ற நகரத்தைப் பிடிக்க கலகக்காரரும், சர்க்கார் துருப்புக் களும் தீவிரமாகப் போரிடுகின்றன. இந்த யுத்தத்தின் முடிவுதான் ஸ்பெயினின் எதிர் காலத்தை நிர்ணயிக்கப் போகிறதென்று எதிர்பார்க்கப் படுகிறது.

## சீனு—ஜப்பான் யுத்தம்

பல இடங்களில் ஜப்பானிய துருப்புக்களை முன்னேறவிடாமல் தடுப்பதுடன், சீனர்கள் யென்கோ அருகில் ஜப்பானியர்களைத் தோற் கடித்துவிட்டனர். கால நிலையும் மோசமாகிக்கொண்டு வருவதால், ஜப் பானியரின் கவலை அதிகரித்துவிட்டதாகத் தெரிகிறது.

## சீனுவின் வெற்றிக்கு ரஷ்ய உதவியா ?

சீனுவுக்குப் புதியதாக நியமித்துள்ள ஸ்தானுதிபதியின் மூலமாக ரஷ்யா அனுப்பியுள்ள செய்தியில், தன் சுதந்தரத்துக்காக நடத்தி வரும் இந்தச் சண்டையிலிருந்து சீனு வெற்றியுடன் வெளி வருவதை விரும்புவ தாகக் கூறப்பட்டிருக்கிறது.

ரஷ்யா, ஆசியாவின் கோடியிலுள்ள கடற்கரைப் பிரதேசங்களில் கடற்படை, விமானப்படை முதலியவைகளை ஏராளமாகக் குவித்துப் பிர மாதமான முஸ்தீப்புகளைச் செய்வதாகத் தெரிகிறது.

## கென்யாவில் நிறத் திமிர்

கென்யாவில் செழிப்பாயுள்ள மேட்டுப் பிரதேசங்களை ஏகபோக மாகச் செய்துள்ள உத்தரவை எதிர்த்து இந்தியர் செய்யும் கிளர்ச்சியைத் தாங்கள் சகிக்க முடியாதென்று ஐரோப்பியர்களின் தலைவர் கூறியதாகத் தெரிகிறது.

## வெளி நாட்டில் இந்தியர்களின் கேவல நிலைமை

ஜான்ஸிபார் கிராம்பை இந்தியர்கள் அடியோடு பகிஷ்கரித்து வெற்றி பெற்றால், அதன் பலனாக மற்ற காலனிகளில் இந்தியர்கள் படும் கஷ்டங்களுக்கும் விமோசனம் ஏற்பட வழியுண்டாகுமென்று கருதப்படு கிறது.

## ஆஸ்திரேலியாவின் 150-வது ஆண்டு விழா

ஆஸ்திரேலியாவில் முதல் பிரிட்டிஷ் பிரஜையாகிய பிலிப் என்பவர் அடியெடுத்து வைத்த தினத்தின் 150-வது ஆண்டுவிழா ஜனவரி 26-ந் தேதி வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183016

## பிரஞ்சு மந்திரி சபை

பழைய பிரஞ்சு மந்திரி சபை கலைக்கப்பட்ட பின்னர், குடியரசுத் தலைவர், மற்ற கக்ஷித்தலைவர்களை மந்திரி சபை அமைக்கும்படிக் கேட்டும் ஒன்றும் பலிக்கவில்லை யாதலால், மறுபடியும் ஷாடேம்ஸ் மந்திரி சபையே ஏற்பட்டுவிட்டது. அபேதவாதிகளோ பொது உடைமைக்காரர்களோ அந்த மந்திரி சபையில் இல்லை. ராடிகல் கட்சியார் ஏகபோகமா யிருக்கிறார்கள். ஸ்பெயினில் தலையிடக்கூடாது. நாணய பரிவர்த்தனையைச் சீர்படுத்தவேண்டும் என்பதே மந்திரி சபையின் முக்கிய நோக்கமா யிருக்கும்.

## 8-1/2 மணியில் 2000 மைல்கள்

இத்தாலிய விமானி டாகர் என்ற ஊரிலிருந்து போர்ட் நேடலுக்கு 2000 மைல்கள் எட்டரை மணி நேரத்தில் சென்று, இதுவரையில்லாத அதிக வேகத்துக்கு ரிகார்டு உண்டாக்கி யிருப்பதாகத் தெரிகிறது.

## இலங்கை கவர்னரின் யதேச்சாதிகாரம்

கவர்னர் சொந்தமாக எந்த அவசரச் சட்டத்தையும் செய்துவிடலா மென்ற அதிகாரம் பிரிட்டிஷ் சர்க்கார் கொடுத்திருப்பதை ரத்து செய்ய வேண்டுமென்று பலமான கிளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது.

---

# உள்நாட்டுச் செய்திகள்

—(o)—

## அடுத்த ராஷ்டிரபதிக்கு மகாத்மாவின் ஆசி

"வருக! ஜவஹர்லாலின் ஸ்தானத்தை வகிக்க, கடவுள் உமக்குப் போதிய பலம் அருளுவாராக. என் அன்பு."—பாபு.

## வித்தல் நகரின் விசேஷ அம்சங்கள்

காங்கிரஸ் ஸெஷனின்போது மகாத்மா முன்னிலையில், வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்த பூரண் புட்சீ என்பவருக்கும், ஆனந்திக்கும் கலப்பு மணம் நடைபெறும்.

குஜராத்தின் பிரபல சித்திரக்காரரான ஸ்ரீ. ரவிசங்கர் ரவாலின் படங்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

9 வயதுள்ள மாஸ்டர் சுதர்சன ஆசிரியராகக்கொண்டு "வித்தல் நகர்" என்ற தினசரி காங்கிரஸ் கூடும்போது வெளிவரும்.

## ஸ்ட்ரைக் செய்த நர்ஸின் சாகஸம்

இட்சிட்யுபர்குலோஸிஸ் சானிடோரியம் நர்ஸ்கள் தங்கள் குறைகளை நிவர்த்தித்துக்கொள்ள ஸ்ட்ரைக் செய்தபோது ஒருத்தி கிணற்றுக்குள் போய் உட்கார்ந்திருந்தாளாம். அவள் வெளிவர மறுத்ததால் கயிற்றைப் போட்டுக் கட்டி வெளியேற்றினார்களாம்.

## சமஷ்டியைப்பற்றி ஸ்ரீ. நேருவும், போஸும்

"சர்க்காரின் சமஷ்டி திட்டத்தை வரவொட்டாமல் செய்ய அஹிம்சா வழியில், ஒத்துழையாமை எல்லைக்குட்பட்டு சாத்யமான எல்லாவிதமான நடவடிக்கைகளையும் நாம் எடுக்கவேண்டியிருக்கும்."

—ஸ்ரீ. சுபாஷ் போஸ்.

"சமஷ்டியின் அடிப்படையான கொள்கைகளை யாரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள். ஆனால் புதிதாக உருவெடுத்து வரும் தேசிய சக்திகளை எதிர்க்க தேசத்தின் பிற்போக்கான முதலாளித்துவத்தைப் பலப்படுத்தும் எந்த முயற்சிக்கும் தீவிரமான எதிர்ப்பு இருந்தே தீரும்......இத்திட்டம் நம்மீது சுமத்தப்பட்டால், அதைத் தகர்க்க நாம் நீண்ட நாள் போராட வேண்டி யிருக்கும்."

—ஸ்ரீ. ஜவஹர்.

## கோடையில் மலைவாசம் இல்லை

பர்மா சர்க்கார் கோடையில் மலைவாசத்திற்காக மேமியோவுக்குச் செல்வதில்லையெனத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

மத்திய மாகாண சர்க்கார், மந்திரிகள் முதலானோர் தம் சொந்த செலவில் வேண்டுமானல் செல்லலாமெனத் தீர்மானித்திருக்கிறார்கள்.

## வங்காளத்தில் இனி விசாரணையின்றி காவல் இல்லையாம்

எவ்வளவு காலமாயினும் சரி, இனிமேல் யாரையும் விசாரணையின்றிக் காவலில் வைப்பதில்லை யென்று வங்க சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்களாம்.

## பட்டங்களின் ஓட்டம்

பம்பாய், ஐக்கிய மாகாணம் ஆகிய இரண்டு சட்டசபைகளிலும் பட்டங்கள் கொடுக்கும் வழக்கத்தை நிறுத்திவிட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறிவிட்டது.

## கஞ்சி வார்ப்பது கதரே!

மகாத்மாவைத் தரிசிக்கச் சென்றபோது லார்டு லோதியன் ரூ. 250 பெறுமான கதர் வாங்கினதாகத் தெரிகிறது. மேனாட்டினரைக்கண்டாவது நம் நாட்டினர், ஏதாவதொரு காரணார்த்தமாகவாவது கதர் வாங்கி உடுத்தினால் எத்தனை ஏழை மக்களுக்குப் பலனுண்டாகும்.

## ஒரு நாட்டுக்கு ஒரு கொடிதான்

சிகப்புக் கொடியை ஆட்டிக்கொண்டு கூட்டத்தில் கூச்சலிட்டவர்களுக்கு ஸ்ரீ. ராஜாஜி கூறியதாவது:—

"நமக்கு அதிகாரம் கிடைத்திருப்பது உண்மையாயின், அந்தப் பெருமை இந்தத் தேசியக்கொடியைச் சேர்ந்ததாகும். இதை நாம் இன்னும்

பலப்படுத்தவேண்டும். இதனருகில் இன்னொரு கொடியும் பறக்குமானல் இக்கொடியின் பலம் சற்றுக் குறையும். இதுவுமன்றி, எந்தக் கொடி முக்கியமானதென்பதைப்பற்றி ஜனங்களிடையே ஒரு குழப்பத்தை உண்டாக்கிவிடும். ஜனங்களின் கோரிக்கை என்னவாக இருந்தாலும் சரி, அவர்கள் காங்கிரஸ் கொடியை வணங்குதல் வேண்டும்.

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

### புது நிர்வாகஸ்தர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் :— | | ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் |
| உபதலைவர் :— | ,, | ஓ. ப. ராமசாமி ரெட்டியார் |
| பொக்கிஷதார் :— | ,, | அவிநாசிலிங்கம் செட்டியார் |
| காரியதரிசிகள் :— | ,, | வி. பி. சுப்பையா |
| | ,, | கே. எஸ். முத்துசாமி. |

---

## மதிப்புரை

### விஷ விருக்ஷம்

[ஆசிரியர் : பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாய. ஸ்ரீமான் டி. என். குமாரஸ்வாமி பி. ஏ., மொழி பெயர்த்தது. 310 பக்கங்கள். விலை 1-8-0. கிடைக்குமிடம் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.]

வங்காளத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆசிரியர் பங்கிம் சந்திரர் இயற்றியுள்ள விஷ விருக்ஷத்தை நம் நாட்டினரும் படித்து ஆனந்திக்குமாறு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது சிறந்த தொண்டே ஆகும். இதன் நடை கதையின் சுவைக்குப் போட்டி போடும் வண்ணம் அமைந்து வாசகர்களைப் பரவசமுறச் செய்கிறது.

உத்தம மனைவியின் பதிபக்தியையும், விதவா விவாகத்தின் கட்டாயத்தையும், காதலின் பரிசுத்தத்தையும் ஆசிரியர் வெகு அழகாகச் சித்தரித்திருக்கிறார். இக்கதையின் ருசியும் நடையும் ஒன்று கூடிப் படிப்போருக்குப் பெரும் விருந்தாகவே அமைந்திருக்கிறதென்றால் மிகையாகாது. தமிழன்பர்கள் இதனை வாங்கி ஆதரிக்கக் கோருகிறோம்.

"விஷ விருக்ஷ"ப் பிரதிகள் "ஜகன்மோகினி" ஆபீஸிலும் கிடைக்கும்.

# நூதன குறள்

பகையின்றிப் பல்பெருஞ் செல்வ முடைமை
தகையொன்று சுற்றம் தரும். 1

சுற்றமிலான் செல்வம் சுமப்பாரை யின்மையின்
நிற்றலிலாது கெடும். 2

வகை முற்று மாயா தெழுதல் அரசன்
பகை வளரச்செய்யும் பயன். 3

செய்ந்நன்றி கொன்றுனைச் சேராள் திருமகளும்
உய்வழியு மில்லையென வோர். 4

நாளுே டியைபிலனை நல்லறஞ் சாராதென்னும்
ஊனுே டுயிர்தாங் குலகு. 5

—பண்டித. திரு. ராகவாசாரியர்.

---

## ' நடு நிசிச் சூரியன் '

### பல மணி நேரம் பிரகாசித்தது

ஜனவரி 26ந் தேதியன்று இரவில் பல மணி நேரம் அரோரா போரியாலிஸ் என்ற நடுநிசிச் சூர்யன் பிரிட்டனிலும் இன்னும் சில ஐரோப்பிய நாடுகளிலும் சுடர்விட்டு வர்ண விஸ்தாரங்களோடு வான மண்டலத்தில் பிரகாசித்தது.

பூமியின் துருவ பாகங்களில் வான மண்டலத்தில் தோன்றும் இயற்கைக் காட்சி சமயா சமயங்களில் அதை அடுத்த பிரதேசங்களிலும் தோன்றுவதுண்டு.

பாரீஸ்-லண்டன் விமானிகள் பல கோஷ்டிகளை உயர அழைத்துச் சென்று விநோதத்தைக் காண்பித்தனர்.

ஷார்ட்வேவ் ரேடியோ செட்டுகளும், டெலிகிராப் டேப் மெஷின்களும் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டன.

பலர் இதை முதலில் நூதன விதமான யுத்த யந்திரம் பரீட்சிக்கப்படுகிறது என்றும், பலர் தெய்வக் குற்றம் என்றும் நினைத்து நடுங்கினர்.

தெற்கே கிரீஸ், போர்ச்சுகல் வரை இது தெரிந்ததாம்.

# சென்னை ஸ்டுடியோச் செய்திகள்

## 'அனாதைப் பெண்'

சென்ற மாதத்தில், தாசில்தாரின் பங்களா, ஜெயில், கோர்ட்டு முதலிய ஸீன்கள் முடிந்து மொத்தத்தில் முக்கால் பங்குக்கு மேலாகப் பூர்த்தியாகி விட்டது. இன்னும் சில வெளிக் காட்சிகளே பாக்கி யிருக்கின்றன. இதற்குள்ளாகவே, பட விநியோக உரிமைகளுக்காகப் பல பாகங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் குவிந்து கொண்டிருக்கின்றன.

இந்தப் படத்தில் வரும் முக்கியமான பாடல்கள் ஓடியன் கம்பெனியாரால் ரிகார்டு செய்யப்பட்டு விட்டன. படத்திற்கு முன்னதாகவே அவை வெளியிடப்படுமென அறிகிறோம்.

ஸ்ரீமான் பி. யு. சின்னப்பா சென்ற மாதம் மதுரையில் நடத்திய கச்சேரியில், "அனாதைப் பெண்"ணிலிருந்து, பாடிய பாடல்களைக் கேட்காதவர்கள் கவலைப்பட வேண்டாம். சீக்கிரத்தில் அவைகளை ரிகார்டில் கேளுங்கள்.

## பஞ்சாமிருதம்

ஜனவரி 25-ம் தேதியன்று மாலை கார்த்திகேயா பிலிம்ஸாரும், ரோகிணி பிக்சர்ஸாரும், சேர்ந்து தங்கள் கம்பெனியின் வருஷோத்ஸவ வைபவ விழாவை அடையாற்றிலுள்ள பிஷப் கார்டனில் வெகு சிறப்பாயும் விமரிசையாயும் நடத்தினார்கள். அது சமயம் பல பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள். சிற்றுண்டி விருந்திற்குப் பின்னர் டைரெக்டர் முத்துஸ்வாமி (முருகதாசர்) ஓர் சொற்பொழிவாற்றினார். கார்த்திகேயா பிலிம்ஸ் இதுகாறும் செய்துள்ள வேலையைப்பற்றி, அவர் வெகு அழகாயும், உண்மையுடனும் பேசினார். பின்னும் அவர் சமூகக் கதைகளைப் படமெடுக்க வேண்டிய அவசியத்தையும் சமூகக் கதைகள் எழுதுபவர்கள் இவர்களுடன் ஒத்துழைத்தால் அவர்களுக்கு வேண்டிய நுணுக்க விஷயங்கள் முதலியனவற்றைத் தெரிவித்து, திரைக்கு உகந்தவாறு எழுதுவதற்கு ஒத்தாசை செய்வதாயும் கூறினார்.

இந்தப் பாகம் ஒவ்வொரு எழுத்தாளரும் கவனிக்க வேண்டிய விஷயமாகும். சொற்பொழிவு செய்யுமுன் அவரிடம் எனக்குப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தபோது சினிமா விஷய மாகப் பேச்சு நடக்கையில், அவரிடம் நான் கூறியதின் சாராம்சம் வருமாறு: "ஒரு படம் வெற்றிகரமாக முடிய வேண்டுமானல், அது ஒருவரை மட்டும் பொருத்த வெற்றியல்ல. பஞ்சா மிருதத்திற்கு ஐந்து வஸ்துக்களும் முறைப்படி சேர்ந்தாலன்றி அது பஞ்சாமிருத மாகாததுபோல், ஒரு படத்தின் சிறப்பிற்கு சினிமா நுணுக்கங்கள் முற்றிலும் அமைந்த நல்ல வசதியும் நுணுக்கங்கள் அறிந்த நல்ல புத்திசாலிகளுள்ள ஸ்டுடியோ, பேரறிவு படைத்த பொறுமை நிறைந்த டைரெக்டர், தம் பாத்தி ரத்தின் உணர்ச்சி யறிந்து நடிக்கும் நடிகர்கள், பிசினரித்தனமும் பயந்தாங்கொள்ளித்தனமும், தொணதொணப்புப் புத்தியும் இல்லாத முதலாளி, உயர்ந்த நீதியும், கற்பனையும் கூடிய கதை ஆகிய ஐந்தும் ஒரு மனப்பட்டு அபிப்பிராய பேதமின்றி ஒற்றுமை யாகச் சேர்ந்து உழைத்தால் அதன் பலன் கட்டாயம் வெற்றியே கொடுக்கும். பொதுமக்களும் சந்தோஷத்துடன் படத்தைப் பார்த்துப் போற்றத் தவறமாட்டார்கள்: அதில்லாததனல்தான் அனேக படங்களில் தோல்வியுண்டாகிறது."

முருகதாசர் நான் கூறியவற்றை யாமோதித்துப் பேசியதை நான் மனப்பூர்வமாக வரவேற்பதுடன், அவர் பிரசங்கத்தில் கூறியபடியே ஆசிரியை என்ற முறையில் என்னலாகியவற்றைச் செய்யவும், கற்றுக் கொள்ளவும் நான் தயாராகவும் இருக்கிறேன் என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதிரி ஒற்றுமையுடன் கூடிய உழைப்பு ஏற்படுவதை எல் லோரும் விரும்புவது கடமை என்றும் நினைக்கிறேன்.

பிறகு ரோகிணி பிக்சர்ஸாரின் மியூஸிக் டைரெக்டரின் இனிய வாத்ய கானமும், பிறகு கண்ணம்பாளின் மதுரகானமும், அதன் பின் பரத நாட்டியக் குயிலின் அபூர்வ பாடலும் ஆடலும் 'கிருக லக்ஷ்மி'யில் சில காட்சிகளும், 'ராமதாஸ்' நாடகத்தில் ஒரு காட் சியும் பஞ்சாமிருத விருந்துபோல் பிரம்மாநந்தமாக நடை பெற்றன. படக் கலைக்காக உழைக்கும் அவர்களுடைய இரு ஸ்தாபனங்களும் இறைவனருளால் ஓங்கி வளர வேண்டு மாய்ப் பிரார்த்திக்கின்றேன். —(வை. மு. கோ.)



## ஆவதும் பெண்ணால்!

- வாழ்க்கையில் பல உணர்ச்சிகளை அனுபவித்து, இவ்வுலக வாழ்க்கையையே சிறப்பித்து, அதைச் சுவர்க்க வாழ்வு போலச் செய்வது பெண்ணே!

## அழிவதும் பெண்ணால்!

- அதே வாழ்க்கையை நரகம் போன்ற படுகுழியில் தள்ளுவதும் பெண்ணே!

இவற்றுள்

- ஒன்றில் களங்கமற்ற அன்பும், தியாகமும் சோபிக்கிறது. மற்றொன்றில் பேராசையும், சுயநலமும் தாண்டவமாடுகிறது.

இவ்விரண்டின் முரண்பாடுகளை

ரோஹிணி பிக்சர்ஸாரின்

# "கிருஹலக்ஷ்மி"

என்னும் ஊன்றிய கருத்தும், உயரிய லக்ஷ்யமும் அடங்கிய படத்தில் கண்டு களியுங்கள்.

**உங்கள் ஊர் பிரபல தியேட்டரில் எதிர்பாருங்கள்!**

---

**ரோஹிணி பிக்சர்ஸ் லிமிடெட்,**

43, ஆசாரப்பன் தெரு, சென்னை.

நம் "மோகினி" பிரசுரங்களில்

# மூன்று டாக்கி நாவல்கள்!

## ராஜமோஹன் : (ரூ. 1—4)

நீங்கள் வெகு நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்த இரண்டாம் பதிப்பு தயாராகி விட்டது. 'பணமா, குணமா? அந்தஸ்தா, அன்பா? தாயின் சேவையா அல்லது தன் சுக வாசமா?'.... இவை போன்ற பல கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் அற்புதமான கதை.

## அனுதைப் பெண் : (ரூ. 1—4)

மனத்தை யுருக்கிக் கண்ணீரைப் பெருகச் செய்யும் பலவித சம்பவங்கள் நிறைந்த மகத்தான நாவல். முதற் பதிப்பு பிரதிகள் சொற்பமே கைவசமிருக்கின்றன.

## தியாகக் கொடி : (ரூ. 2)

சம நிலைத் தொண்டின் உயர்வையும், தியாக புத்தியையும் புகட்டும் நவீனம். எப்பேர்ப்பட்டவரும் பிரமிக்கும் துப்பறிதல்........மிகச் சிறந்ததென எல்லோராலும் கொண்டாடப்பட்ட கதைப் போக்கையுடையது.

இவைகளை நீங்கள் இன்னும் படித்திராவிடில்,
உடனே தருவித்துப் படித்து இன்புறுங்கள்.
பிறகு படத்தைப் பார்த்துக் களியுங்கள்!

கலை நுட்பத்தின் சிகரம்!

*

புது வருஷத்தின் நறுமலர்களில்

மனோஹரமான வாசனையுடன் கூடியது

# "பக்த மீரா"

ஒய். வி. ராவின் டைரக்ஷன், நடிப்பு, தயாரிப்பு

நடிக மணிகள்

ஒய். எச். ராவ், பி. ஏ. | வசுந்தரா தேவி

**சிந்தாமணி பிக்சர்ஸ் லிமிடெட்,**

**116, ராயப்பேட்டை ஐரோடு,**

தந்தி: "காமதேனு." சென்னை. போன்: 8331.

'பக்த மீரா'வின் கீதங்களை ஓடியன் ரிக்கார்டுகளில்

எதிர்பாருங்கள்!

இருளுக்குப் பின் ஒளி

இரவுக்குப் பின் பகல்

துக்கத்துக்குப் பின் சுகம்

உளுத்த இதயத்துக்குப் பின்

# மகிழ்ச்சி உதயம்

எதிர்பாருங்கள் !

## 11

தந்தையின் வரவை நிமிடத்திற்கு நிமிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகளின் உள்ளத்தில் பொங்கி எழும் ஆவல் வெள்ளத்தை யாரால் அளவிட முடியும்? அரை நிமிடத்திற் கொரு முறை. உள்ளே ஓடிப்போய் "எம்மா இன்னம் அப்பா வரல்லே? அப்பா எப்பொ வருவார்?" என்று வாஸந்தியும், ராஜுவும் வேணியைக் கேட்டுத் தொந்தரவு செய்வதும், மீண்டும் வீதியில் வந்து நிற்பதும், சற்று தூரத்தில் சாமான்களுடன் வரும் ஒவ்வொருவரையும் "அதோ அப்பா! அதோ அப்பா!" என்று கூறி ஏமாறுவதுமாகத் துடி துடித்து வழியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அச்சமயம் வீதியில் ஓர் இரட்டை மாட்டு வண்டி வந்து நின்றதும், குழந்தைகளின் ஆவல் பின்னும் அதிகரித்து, தம் பிதா தான் வண்டியில் வந்திருப்பதாக எண்ணி "அப்பா! வாங்கிண்டு வந்துட்டயா?" என்று கூவிக்கொண்டே படி இறங்கி ஓடி வந்து வண்டியை எட்டிப் பார்க்கும்போது அந்த வண்டியில் தலையிலடி பட்டு ரத்தம் பெருகும் காயத்துடன் மூர்ச்சி படுத்திருப்பதை யறிந்து அப்படியே அலறிப்போய் "அப்பா! அப்பா!" என்று கத்தினார்கள்.

இதற்குள் வண்டிக்காரன் இறங்கி, வாஸந்தியை நோக்கி "அம்மா! கத்தாதே. ஒங்க உள்ளு எது காட்டு. அவரெ கொண்டு உட்ரேன்" என்றான். வாஸந்தி தாங்கமாட்டாத விசனமும், ஆத்திரமும் பொங்கியவளாய் வண்டிக்குள் சடக்கென்று ஏறிக் கொண்டு "அப்பா! அப்பா! எம்பா காயம் பட்டுது? எங்கேப்பா வியுந்தே?....கண்ணெ தறந்து பாருப்பா! அப்பா! ஐயோ! அப்பா பேசல்லயே. வண்டிக்காரா! எங்கப்பாக்கு என்ன வந்துது? எங்கே இந்த அடி பட்டுது? சொல்லேன்" என்று கண்ணீர் வழிய கதறிக் கேட்டாள்.

வீதியில் போவோர் வருவோர் இந்த கூக்குரலைக் கேட்டு கூட்டங் கூடி "என்ன! என்ன!" என்று வண்டியைச் சூழ்ந்து கொண்டார்கள்.

வண்டிக்காரன் கூட்டத்தை விலக்கிக்கொண்டு, வண்டிக்குள் தலையை நீட்டி வாஸந்தியை நோக்கி "அம்மா! நீ ஏன் இப்படி கூச்சப் போட்றே; கும்பு கூடிப்போறது. இந்த மாடு மெரண்டு தாறுமாறு வண்டியை இழுத்திகினு ஓடச்சே இவரு எதிரே வந்து எக்கச்சக்கமா உயிந்துட்டாரு. எங்க எஜமான் அங்கெயே எறங்கிகினு இவரெ ஊட்டுலே வுட்டுட்டு வரச் சொன்னாரு. நீ எறங்கு. இவரெ உள்ளே கொண்டு போவலாம்" என்று வாஸந்தியை இழுத்துக் கீழே இறக்கினன்.

பிறகு மூர்த்தியை ஆட்டுக் குட்டியைப் போல் தூக்கிக் கொண்டு படி ஏறினன். வாஸந்தி கண்ணீர் பெருகப் பொங்கும் துயரத்துடன் முன்னே வழி காட்டிச் சென்றாள். ராஜு இன்னும் குழந்தையாகையால், அதற்கு ஒன்றுமே தோன்றாது கிலி பிடித்துப் போய்விட்டது. சிறிது நேரம் பேசக்கூடத் தோன்ற வில்லை. தன் தமக்கையை நோக்கி "ஏன் அக்கா! அப்பா பட்டாசு வாயிண்டு வரச்சே அதை யாராவது திருடன் பிடுங்கிண்டு அப்பாவெ அடிச்சுட்டானு?" என்று அவன் சிறிய புத்திக்குத் தோன்றியதைக் கேட்டான்.

வாஸந்தி பதிலே சொல்லாமல் "பேசாமெ யிருடா! சனியனே!" என்று தான் பெரியவள் என்கிற அதிகாரத்தையும் விடாமல் காட்டிக்கொண்டே உள்ளே சென்றாள். வண்டிக்காரன் மூர்த்தியைத் தூக்கிக்கொண்டு வந்தான். ராஜுவும் பின்னாலேயே ஓடி வந்தான். விதி யாரை விட்டது? சற்று முன் நடந்ததும், இனி நடக்கப்போவதும் யாராலறிய முடியும்? எல்லாம் அவன் செய்யும் லீலா விநோதத்தின் மகிமையல்லவா! பட்டாசு வாங்கி வருவதாகச் சென்ற மனிதனை ஆவலோடு எதிர்பார்க்கும் குழந்தைகள் எப்படிக் கண்டார்கள்? விதியின் வலிமையை மாற்றல் அரிதன்றோ?

## 12

அன்று மகோன்னதமான கார்த்திகைப் பண்டிகை யாகையால், வேணி அவள் இருக்கும் சிறு விடுதியை பெருக்கி மெழுகிப் பின்னர் ஸ்வாமியை பஜித்தபடியே அவரது சன்னிதானத்தின் முன்பு கோலமிட்டுக் கொண்டே "ஜகதீசா! உன்னுடைய க்ருபா கடாக்ஷம் என்றும் இவ்வேழை மீது நிலைத்திருந்தால் போதும். அதிக ஆசை அதிக நஷ்டம். அன்றாடம் கஞ்சிக்கு வேண்டிய மட்டும் தொழில் காட்டினயானல் போதும். உன்னடியார்கள் வருந்தி கஞ்சிக்குத் தவித்தால் அந்த வருத்தம், அவமானம் உனக்கில்லையா?" என்று வேண்டும் பொழுது, வாஸந்தி பெரிய குரலால் "அம்மா! அம்மா! அப்பாவே பாரேன். ஐயோ! தலையிலே ரத்தம் வழியறதே. கண்ணை தறக்கவே இல்லியே. பேசவே மாட்டேங்கருரே!" என்று கத்திக்கொண்டே ஓடி வந்து, கயித்துக் கட்டிலில் பாயை விரித்து அதில் விடும்படி வண்டிக்காரனுக்குக் கூறினள்.

ஈச்வர த்யானத்தில் மெய் மறந்து தறிக்கையில் பேரிடி போன்ற இவ்வார்த்தைகளைக் கேட்டதும், வேணி கதிகலங்கிப் போய் கையிலிருந்த மாவு கொட்டாங்கச்சி கீழே நழுவுவது கூடத் தெரியாமல் அலறிக் கொண்டு ஓடி வந்தாள். அவளுக்கு ஒன்றுமே தோன்ருமல், ஆகாயமும் பூமியும் ஒன்ருய் சுழல்வது போன்ற வேதனையுண்டாகி விட்டது. "வாஸந்தி! என்னம்மா! அப்பாக்கு என்ன? வண்டிக்காரா! என்னப்பா சமாச்சாரம்! சீக்கிரம் சொல்லேன்" என்று கேட்டுக் கொண்டே, ஒரு செம்பில் வென்னீர் கொண்டு வந்து ஒரு துணியை நனைத்து மூர்த்தியின் தலையில் வழியும் ரத்தத்தை துடைத்தாள்.

இதற்குள் வாஸந்தி விசிறி கொண்டு வந்து விசிறுகிருள். ராஜூ பேந்த பேந்த விழித்தபடியே அம்மாவையும், அப்பாவையும் மாறி மாறிப் பார்க்கிருன்; ஒன்றுமே தோன்ருது இடிந்து போய் விட்டான். வண்டிக்காரன் உண்மையில் பரிதாபத்துடன் "அம்மா! எங்க எசமான் ரெண்டு வடக்கத்தி காளெங்களெ இப்

பத்தான் புடிச்சாந்தாரு. அது இன்னும் இந்த ஊரு மோட்டாக் காருங்க கிட்ட பயகலீங்க. அதெ கட்டிக்கினு எங்க எசமான் கடெத்தெரு பக்கம் போனாருங்க. எதிரே ஒரு மோட்டாரு பெரிய பூதம்பேல வந்திடுச்சு. அதெப் பாத்து காளெ மெரண்டு போய் தாறுமாறு வண்டியெ இஸ்திக்கினு ஓடித்துங்க.

அப்போ இந்த ஐயா ஏதேதோ சாமானுங்க வாங்கிகினு வந்தாரு. அந்தப்பரம் மோட்டாரு. இந்தப்பறம் மாட்டு வண்டி. நடுவுலே ஐயா மாடு முட்டி வுயுந்துட்டாரு. நானு சாமர்த்தியமா வண்டியெ இஸ்து புடிச்சித் திருப்பினேன். அதனாலேதானுங்க இந்த மட்டும் மீந்துச்சி. சாமானுங்கல்லாம் சோதா பசங்க ஆளுக்கு ஒன்னு தூக்கிகினு பூட்டாங்க.

இவரு கீயே உயிந்ததும் நான் மாட்டெ கட்டிப்புட்டு கிட்ட போயி விசாரிச்சேனுங்க. இந்த ஊடுன்னு சொன்னாரு. அப்பறந்தான் மயக்கம் வந்திடிச்சி. எங்க எசமான் வண்டிலெ உட்டு வூட்லெ கொண்டுபோயி உட்டுடுன்னாரு. தூக்கியாந்தேன். அழுவாதீங்க. நல்ல மருந்து போட்டு கட்டுங்க. ஐயோ! மணி ஓசை கேக்குதுங்க. காளெ பிச்சிகிச்சோ என்னமோங்க?" என்று கூறிக்கொண்டே, ஓட்டமாக ஓடி விட்டான்.

**வே**ணியின் இதயம் தத்தளிக்கிறது. தண்ணீரை முகத்தில் தெளித்து வாயிலும் வார்த்துப் பார்த்தாள். பேச்சு மூச்சே இல்லை. வாஸந்தி அடங்காத விசனத்துடன் "அப்பா! அப்பா! கண்ணெ தெறந்து பாரேன்; அப்பா! அப்பா!........ஐயோ! கண்ணெயே தறக்கல்லெயே! அம்மா! என்ன பண்றதும்மா!" என்று கலங்கினாள்.

**வே**ணி தனக்குத் தெரிந்த கை மருந்துப் பொடி யொன்றை தலைக்கு வைத்துக் கட்ட வாரம்பித்தாள். வாஸந்திக்கு இருப்பு கொள்ளவில்லை. "அம்மா! நீ அப்பாவே ஜாக்ரதையா பாத்துக்கோ! நான் இதோ ஓடிப் போய் டாக்டரை அழைச்சுண்டு வரேன்" என்று கூறி எழுந்தாள்.

வேணி:—அசடே! எந்த வைத்தியனை நீ கூட்டிண்டு வர முடியும்? பணம் வைக்காமே யாருமே வரமாட்டாளம்மா!

அதோடே நீ சின்ன பொண்ணாச்சே ஒன்னே யார் லக்ஷ்யம் பண்ணுவா?

வாஸந் :—நீ பேசாமெ இரும்மா! நான் ஒரு நிமிஷத்துலெ ஓடிப் போய் அழைச்சிண்டு வரேன். ஜாக்ரதையா பாத்துக்கோ! தடங்கல் பண்ணாதே.—என்று ஆவேசத்துடன் சொல்லிக் கொண்டே ஒரே ஓட்டமாக ஓடி மறைந்து விட்டாள். வேணி கடவுளை ப்ரார்த்தனை செய்தபடியே உட்கார்ந்திருக்கிறாள்.

## 13

ஆவேசத்துடன் கிளம்பிய வாஸந்தி இரண்டு மூன்று தெருக்களைத் தாண்டி, ஓட்ட ஓட்டமாக ஒரு பெரிய வைத்தியரின் வீட்டுப் படி ஏறி உள்ளே ஓட முயன்றாள். வீதியில் காவலிருந்த பாராக்காரன் இச் சிறுமியின் கையைப் பிடித்து இழுத்து நிற்க வைத்து "ஏய்! எங்கே இத்தனை தைரியமா பெரிய வீட்டுக்கு பெண் கொடுத்தாப்லே போறே! நான் இங்கே நிக்கரது தெரியல்லே. என்ன முழிகிப்போனாப்பலே ஓட்றே?" என்று அதட்டினான்.

வாஸந்திக்கு ஏற்கெனவே உள்ள துக்கத்துடன் இந்த மிரட்டல் பின்னும் மனத்தைக் கிளறியது. அவளுடைய தைரியத்தை அப்போதும் விடாமல் "இதோ பாரு. எங்கப்பாவெ ஒரு பெரிய மாடு முட்டி தள்ளி, மண்டெலெ அடிபட்டு கீழே விழுந்து மயக்கமாய் பூட்டா. ரத்தம் வழியறது. சீக்கிரம் டாக்டரெ அழெச்சிண்டு போக வந்தேன். என்னெ விடு" என்று மீண்டும் திமிறிக் கொண்டு உள்ளே ஓடப் பார்த்தாள்.

வேலைக்காரன் தடுத்து "ஏ பொண்ணே! இப்போ டாக்டரெ பாக்கவே முடியாது. அவர் ஒரு ஆபரேஷன் கேஸில் இருக்காரு. ஆயிரம் ரூபா கொடுத்தாலும் இப்ப வரவே மாட்டாரு.

நீ வேறெ யாரையாச்சும் அழைச்சிண்டு போய் சீக்கிரம் பாரு. ஐயோ பாவம்! போம்மா அழாமெ போ!" என்முன்.

துள்ளிக் குதித்த ஆவல் வாஸந்தியின் மனத்தில் உடைந்தது. அவளுக்குப் பெருங் குழப்பமும், திகிலும் உண்டாகி விட்டதால் தள்ளாடிக் கொண்டே படி இறங்கி விட்டாள். எதையோ தீர்க்கமாக யோசிப்பதுபோல் சிறிது நின்முள். அவளுடைய மூளையில் ஏதோ ஓர் நூதன உணர்ச்சியுடன் கூடிய யோசனை உதயமாகியதை அவளுடைய முகம் சடக்கென்று மலர்ந்து கண்களில் ஜீவ சக்தி ப்ரகாசித்தது, நன்கு விளக்கி விட்டது. உடனே மானை விட வேகமாக ஓடவாரம்பித்தாள்.

அங்கு பிடித்த ஓட்டம் சில நிமிடத்திற்குள் அவளுடைய பள்ளிக்கூடத்துக்குள் சென்று தலைமை உபாத்தியாயினியின் அறையில் நின்முள். ஓடி வந்த வேகத்தின் அதிர்ச்சியினுல் மூச்சு துரத்துகிறது. வெயர்வை வெள்ளமாகக் கிளம்பி வழிகிறது. அங்குள்ள வேலைக்காரன் அவ்வறையிலுள்ள எஜமானியின் புத்தகங்கள் உள்ள பீரோக்களையும், கண்ணுடி, மேஜை, நாற்காலி முதலியவற்றையும் துடைத்துக் கொண்டிருந்தான்.

அச் சமயம் வாஸந்தி இத்தனை அலங்கோலமாக வந்து நின்றதைப் பார்த்து, வியப்புற்று "என்னம்மா! இன்னிக்கு லீவுன்றது மறந்துட்டாயா! இன்னிக்கு கார்த்தி பண்டிகெ இல்லே! பள்ளிக்கூடம் கடயாதம்மா! என் இப்படி எரைக்க எரைக்க ஓடி வந்தே?" என்று பக்ஷமாகக் கேட்டான்.

வாஸந் :—(கண்ணில் நீர் ததும்ப அவ் வேலைக்காரனின் கைகளைப் பிடித்துக்கொண்டு) முத்தய்யா! பள்ளிக்கூடம் லீவுன்றது எனக்கு தெரியும். அதுக்காக வல்லே. எங்கப்பா திடீன்னு கீழே விழுந்து தலெலெ அடிபட்டு ஞாபகமில்லாமே கடக்கிறு. நீ ஒரு ஒபகாரம் பண்ணனும். அதுக்குதான் இங்கே வந்தேன். இந்த டெலிபோனில் டாக்டர் ராமநாதனைக் கூப்பிட்டுட்டு என் கையிலே ரேஸீவரே குடுத்துடு. நான் பேசிக்கிறேன். இதுதான் நீ செய்யணும்.

முத்தய்யா .—அடடா! அவர் பெரிய டாக்டராச்சே. அவர் வந்தா சரியானபடி பணங் கொடுக்க உங்களாலே முடியுமோ!

வீட்டுக்கு வந்தாலே பத்து ரூபா குடுக்கணமே....தரும ஆஸ்பத்தி ரிக்கு போகக் கூடாதோ.

வாஸந்தி :—(சற்று யோசித்த பின்) தரும ஆஸ்பத்திரி இருக் கட்டும். முத்தய்யா! எங்கம்மாகிட்ட பணம் இருக்கு. அவர் வந்தாதான் நன்னு பாப்பார். சீக்கிரம் குணமாயிடும். நீ கூப்பிடு முத்தய்யா! எனக்கு நம்பர் தெரியாது—என்றுள்.

முத்தய்யன் இயற்கையிலே நல்ல உபகார குணமுடையவன். அதோடு, மூர்த்தி ஒரு சமயம் இந்த முத்தய்யனுக்கு இனுமாக ரெண்டு சொக்காய் தைத்துக் கொடுத்த நன்றி விசுவாசம் உள்ள வன். ஆகையால் உடனே இசைந்து டெலிபோனில் நம்பர் பார்த்து டாக்டரை அழைத்து விட்டு வாஸந்தியிடம் ரிஸீவரைக் கொடுத்தான்.

இச் சிறுமி பரபரப்புடன் ரிஸீவரை வைத்துக்கொண்டு "ஹல்லோ டாக்டர்! குட் மார்னிங்கு சார்! எங்கப்பாக்கு அடிபட்டு மயக்கமா விழுந்துட்டா இன்னும் தெளியலே. நீங்க அப்பாசாமி தெரு, **66**-வது நெம்பர் வீட்டுக்கு உடனே வரணும்....இப்பவே வரணும். அவசரம்....ஆமாம் டாக்டர்! ரத்தம் நிக்கவே இல்லே.... சீக்கிரம் வாங்கோ....குட் மார்னிங்கு" என்று கூறி, ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு "முத்தய்யா! ஒனக்கு ரொம்ப வந்தனம். நான் போய் வறேன்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து ஓட்டம் பிடித்தாள்.

## 14

ஆவலே உருவாக ஓடி வந்து "அம்மா! அம்மா! பெரிய டாக்டர் ராமநாதனேயே வரச் சொல்லி விட்டு வந்திருக்கேன். இப்பவே வந்துடுவா. இன்னமா அப்பா கண்ணெ தறக்கல்லே? பேசி ஞரா! மயக்கம் தெளிந்ததா? அப்பா! அப்பா! கண்ணெ தறந்து பாரேம்பா! ராஜு அழறான் பாருப்பா. அப்பா!" என்று

கூப்பிடும்போது மோட்டார் ஹாரன் வீதியில் கேட்டதை கவனித்ததும் "அம்மாம்மா! அதோ டாக்டர் வந்துட்டார். நான் போய் கூட்டிண்டு வரேன்" என்று எழுந்து ஓடினுள்.

அதற்குள் அந்த அறையின் வாசற்படி யருகில் டாக்டர் கையில் ஒரு சிறு தோல் பெட்டியுடன் வருவதைப் பார்த்த வாஸந்தி, ஆச்சரியத்துடன் "டாக்டர்! குட் மார்னிங்கு. இதான் எங்க அறை. உள்ளே வாங்கோ! இன்னும் எங்கப்பா கண்ணே தெறக்கல்லெ டாக்டர்! நல்ல மருந்தா குடுத்து சீக்கிரம் குணமாக்கிடுங்கோ டாக்டர்!" என்று குழந்தைகளின் சுபாவத்தைப் போலவே களங்கமற்றுக் கூறினுள்.

தன்னை ப்ரமாதமாக டெலிபோனில் அழைத்ததைப் பார்த்தால் ஏதோ பெரிய மனிதர்களின் வீடு என்று எண்ணி மலைத்துக் கொண்டு வந்த டாக்டர் இச் சிறு வீட்டையும், இங்குள்ள ஏழைச் சின்னங்களையும் பார்த்து, தாம் வீடு தவருக வந்துவிட்டோமோ என்று யோசித்துக்கொண்டு நிற்கையில்தான், வாஸந்தி ஓடிவந்து மேற் சொன்னவாறு தெரிவித்தாள். டாக்டரின் கையைப் பிடித்து இழுக்கவும் ஆரம்பித்தாள்.

டாக்டர் :—என்ன ! நீயா டெலிபோன் பண்ணே ?

வாஸந்தி :—என் டாக்டர்! நான்தான் பண்ணேன். எனக்கு டெலிபோனில் பேசத் தெரியுமே.

டாக்டர் :—அடாடா ! என்ன தைரியம்! நான் யாரோ பெரிய மனுஷான்னு பார்த்தேன்.

வாஸந்தி :—(முகம் சுருங்கியவாறு பரிதாபமாகப் பார்த்துக் கொண்டே) டாக்டர் ! ஆபத்துன்னு எல்லாருக்கும் ஒன்னுதானே டாக்டர் ! இதிலே பணக்காரா, ஏழென்னு வித்யாசம் உண்டா டாக்டர் ! எங்கப்பாக்கு ஆபத்து வந்தா எங்களுக்கு வேறு திக்கு யாரு டாக்டர்! ஏழைகள் கூட்டாக்கா பணமில்லாமெ டாக்டர்கள் வரமாட்டான்னு எங்கம்மா கூட சொன்னு! தர்ம ஆஸ்பத்திரிக்குப் போனுக்க அங்கே கூட ஏழைகளெ சரியாவெ பாக்கறதில்லேன்னு எங்க வாத்தியாரம்மா முன்னே சொல்லி இருக்கா. அதனுல்தான் டாக்டர், நான் நேரே வந்தா நீங்க வரமாட்

டேள்ன்றது தெரிஞ்சுதான் இப்படி டெலிபோன் செய்தேன். டாக்டர்! சீக்கிரம் எங்கப்பாவெ வந்து பாருங்கொ டாக்டர்!" என்று கூறும்போது கண்ணில் மடமடவென்று ஜலம் வழிந்து விட்டது.

இச் சிறுமியின் வார்த்தைகள் டாக்டரின் இதயத்துள் புகுந்து துளைத்தன. வயதில் சிறியவளாயினும் சாமர்த்தியமாக வேலை செய்து, சாதுர்யமாகப் பேசுவதைக் கண்டு வியப்படைந்து விட்டார். தடதடவென்று உள்ளே வந்து மூர்த்திக்கு கட்டு கட்டி, ஒரு ஊசி குத்தி, மயக்கம் தெளிய மூக்கில் ஏதோ முகரச் செய்து, பின்னரே அச்சிறுமியின் பால் வடியும் முகத்தை நோக்கி ஒரு குருநகை புரிந்தார். அச்சிறுமியின் முகத்தில் ததும்பும் ஆவலும், பிதாவிடமுள்ள வாஞ்சையும் அவரை வியப்புறச் செய்தன.

டாக்டரின் மனமும் கலங்கியது. ஒரு விஸிட்டுக்கு 15 ரூபாய் கக்க வைக்கும் தன்னை இச் சிறுமி இத்தனை புத்தி சாலியாய், தந்திரமாய் வரவழைத்துப் பேசிய வியப்பை அவரால் அடக்கவே முடியவில்லை. அதை சற்று சமாளித்துக் கொண்டு "குழந்தெ! அப்பாவுக்கு ஒன்னும் பயமில்லெ. சாயங்காலத்துக் குள்ளே சரியாப் போயிடும். கவலைப்படாதே. எனக்கு பீஸ் குடு; நான் போகணும்" என்று ஒரு மாதிரி பார்த்தபடியே கேட்டார்.

வாஸந்தியின் முகம் சடக்கென்று மாறியது. அவளால் தடுக்க முடியாத ஒரு விதமான விசனம் மனத்தில் பொங்கி எழுந்தது. "டாக்டர்! டாக்டர்! நாங்க ரொம்ப ஏழை. எங்கப்பாக்கு தையல் வேலெதான். அதுவும் இப்போ வரதே கடையாது. எங்கப்பாக்கு சீக்கிரம் ஒடம்பு குணமாகணுமேன்னு நான் ஒங்களெ இப்படி கூட்டிட்டேன். அது ரொம்ப தப்புதான். அதுக்காக என்னே மன்னிக்கணும். பெரியவாகிட்டெ தப்பு பண்ணிட்டாக்க அது பரிகாரமாறத்துக்கு அவாளெ விழுந்து விழுந்து சேவித்து, தாடெலெ போட்டுண்டா பாவமில்லேன்னு எங்க வாத்யாரம்மா சொல்லி இருக்கா. டாக்டர்! என்னால் அதான் செய்ய முடியும்" என்று கண்ணீர் வழியக் கூறிக்

கொண்டே, டாக்டரே எதிர்பாரா வண்ணம் விழுந்து பலதரம் நமஸ்காரம் செய்து விட்டாள். இதைக் கேட்டும், பார்த்தும் நிற்கும் டாக்டரின் மனம் கலங்கிக் கண்ணீர் முட்டி விட்டது. இத்தனை சிறுமியின் மனத்திலும் என்ன பரிசுத்தமான தெய்வ பக்தியும், நம்பிக்கையும், சாமர்த்தியமும் அடங்கி இருக்கிறது என்று ஆச்சரியக் கடலில் மூழ்கியவராய் சிறுமியைத் தூக்கி அணைத்துக் கொண்டு,

"குழந்தாய்! நீ மகா கெட்டிக்காரி! ஒன்னுடைய சமத்காரத்தினால் நான் பரம சந்தோஷப்பட்டேன். நான் விளையாட்டுக்குக் கேட்டேன். நீ வருந்தாதே. நாளைக்கு என் வீட்டுக்கு அப்பாவை அழைச்சிண்டு வா; கட்டு கட்றேன். அழாதேம்மா! என்னையே ஏமாத்திவிட்ட நீ பலே பேர்வழி. நான் போய் வரேன்" என்று கூறிக் கொண்டே பெட்டியை எடுக்கப் போனார்.

வாஸந்தி "ஊ உம்....நான்தான் கொண்டு வருவேன்." என்று பெட்டியைத் தூக்கிக் கொண்டு டாக்டர் பின்னாலேயே சென்றாள். தன் மகளின் அதியற்புதமான சாகஸத்தைக் கண்டு வேணி வியந்தாள்.

## 15

மைதிலி எந்த சந்தோஷத்திலும் பங்கெடுத்துக் கொள்வதில்லை எனினும், அவளுடைய இப்பிறவி பாழ்பட்டு விட்டதேபோல் அடுத்த பிறவியும் பாழாகாமல் இருக்கும்படி சதா பகவானைப் பிரார்த்தனை செய்வது வழக்கம். அன்று கார்த்திகையாகையால், குத்து விளக்குகளையும், வெங்கல அகல்களையும் அழகாகத் துடைத்து குங்குமம் இட்டுக் கொண்டிருந்தாள்.

அச்சமயம் அவர்களின் வண்டிக்கார கருப்பன் அங்கு ஒரு மாதிரியான முகத்துடன் வந்ததைப் பார்த்த மைதிலி "ஏண்டா

கருப்பா! போன வேகமென்ன? வந்த ஜோரென்ன? ஏன் ஒரு மாதிரியா இருக்கே? என்ன சமாச்சாரம்? ரெண்டு கிழங்களும் எங்கே போச்சு?" என்று கேட்டாள்.

கருப்பன் :—ஆமாம்! போற எடந்தான் தெருஞ்சிருக்கிதுங்களே! தென்னுல் ராமன், கருப்பு நாயெ வெள்ளெ நாயாக்கினுனே அந்த மாதிரி இந்த ரெண்டு தாதாங்களும் பதினுறு வயசு கொமரனுகிப்புடப் போராங்களாம். அதுக்கு இன்னமோ மருந்து சாப்புலே வந்துகீதுங்களாம். அதுக்காக போயி ஒரு ஏயெயின் வயித்திலே அடிச்சாப்புலெ தள்ளிப்புட்டாங்க.

மைதிலி :—என்ன! எந்த ஏழெயெ அடிச்சாங்க? சரியா சொல்லு.

கருப் :—அடிக்கலே தாயெ! மாடு மெரண்டு போய் எதிரே வந்த ஆளெ முட்டித் தள்ளி மண்டெயெ ஒடச்சிப்புட்டுது. ரத்தம் வெள்ளமா ஒடுது பாவம்! கால்லெ கூட நல்ல தப்ப பட்டிருக்கும்.

மைதி :—ஐயையோ! பாவமே! அவனெ என்ன பண்ணுங்கோ! ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்விட்டாங்களா?

கருப் :—ஐயோ பாவம்! அவன் கார்த்திக்காவ என்னமோ சாமானுங்கல்லாம் வாங்கியாந்தான். பட்டாசுக்காவ அவன் கொயந்தெங்க என்ன ஆசெயா வாசல்லெயே நின்னுகிணு எதிர் பாத்துது தெரியுமா? நம்ப ஐயா அந்த ஆளெப் பத்தி கொஞ்சமும் கவனிக்கவே இல்லே. மடயன், தடியன் எதிரே வந்து முட்டிண்டான்னு திட்டிப்புட்டு, வண்டியிலேயே அவனெ போட்டுக்கிணு போயி ஊட்டே உட்டுட்டுவான்னுரு. எசமான் உத்தரவு போல கொண்டு விட்டேன். கொயந்தெங்களும் அந்தம்மாளும் என்ன அழுவராங்க தெரியுமா! ஐயோ பாவமுண்ணு இருக்குது.

மைதி :—அட க்ரகசாரமெ! இப்படியா பண்ணுரு? தன் மாட்டினுலெதானெ அந்த மனுஷனுக்கு ஆபத்து வந்துது, வீட்டுலெ கொண்டு வுட்டு நேரே தேறுதல் சொல்லி மன்னிப்பு கேட்டுண்டு வரக் கூடாதா! அவா மனசு எப்படி கஷ்டப்படும்? ஐயோ பாவம்! கருப்பா! குழந்தைகள் ரொம்ப சின்னதுகளா!

கருப் :—பெரிய பொண்ணு அம்மாத்திரம் உயரம் இருக்கு துங்க. 10 வயசுக்குள்ளாற இருக்கும். சின்ன பையன் 5, 6 வயசு இருக்கும். அவரு பொஞ்சாதி மவாலச்சிமிபோலேக்கிராங்க. அவுருகூடதான் ராசா மாதிரி கிராரு. அல்லாரும் அயுவுராங்க.

மைதி :—கிழவர் இப்போ எங்கே இருக்கார் ?

கருப் :—ரெண்டு பேரும் எங்கே போனுங்கண்ணு தெரியாது. தெற்கு பக்கமா போனுங்க.

மைதி :—சரி. நீ நம்ப சின்ன வண்டியே கட்டு. நானுவது போய் பாத்து மன்னிப்பு கேட்டிண்டு வரேன்—என்ருள்.

கருப்பனும் உடனே சென்று வண்டியைக் கட்டி விட்டான். மைதிலி வண்டியில் ஏறிக் கொள்ள, வண்டி கிளம்பியது. 'ஐயோ பாவம்' என்ற ஓர் பச்சாத்தாபமும், காருண்யமும் மைதிலியை பலமான தைரியத்துடன் வெளிக் கிளப்பின.

மைதிலி வேணி வீட்டு வாசலில் இறங்கும்போதுதான் நாம் முன்பு தெரிவித்ததுபோல் டாக்டர் திரும்பியதும், டாக்டர் பெட்டியை எடுத்துக் கொண்டு அவர் பின்னேடு வாஸந்தி ஓடி வந்ததும், மைதிலி இறங்கி படி ஏறியதும். உள்ளிருந்து வரும் டாக்டரைப் பார்த்து ஆச்சரியத்துடன் "ஓ டாக்டர்! நீங்கதான் வந்தீர்களா! நோயாளி எப்படி இருக்கிருர்? பயம் ஒன்னும் இல்லையே! ப்ரக்ஞை வந்ததா! உங்களை யார் அழைத்து வந்தா?" என்று கேட்டாள்.

டாக்டர் :—(நகைத்துக் கொண்டே) இதோ இந்தப் பெண் இருக்காளே! இவள் பலே கெட்டிக்காரி! ஐந்து நிமிஷத்தில் என்னை ஏமாத்தி விட்டாள். இவளுடைய புத்திசாலித்தனமும், சாமர்த்தியமும், பரிதாபமும் என்னை உருக்கின. பெரிய மனுஷன் வீட்டிலிருந்து கூப்பிடுவதுபோலெ டெலிபோன் செய்து விட்டா! நோயாளிக்கு அபாயம் ஒன்னுமில்லே. ஆனு நல்ல அடிதான். உங்களுக்கு பந்துவோ!

மைதி :—பந்துவுமில்லே ; ஒன்னுமில்லே. இவாளெ எங்களுக்குத் தெரியக் கூட தெரியாது. எங்க வீட்டு மாட்டு வண்டியாலேதான் இவருக்கு இந்த விபத்து வந்தது. அவர் ஏன்

பாவின்னுகூட கேக்கலெயாம். ஐயோ பாவம்! ஏழைகளாச் சேன்னு நானே நேர பாத்துட்டு, ஒங்களெ கூப்பிட எண்ணினேன். கடவுளே உங்களெ கூப்பிட்டார்.

டாக்:—ஒங்க மாடா முட்டியது? ஏன், தாதா எங்கே? மருந்துக்குப் போய்ட்டாரா? நான் எத்தனெ சொன்னாலும் கேக்கறதில்லே........சரி....நேரமாறது, நான் வரேன்—என்று கூறிப் பின் வாஸந்தியைத் தட்டிக் கொடுத்துவிட்டு "கொழந்தெ! பயப்படாதே. நான் வரேன். மாமியெ உள்ளே அழைச்சிண்டு போ" என்றார். வாஸந்தியும் "ரொம்ப வந்தனம் டாக்டர்! நமஸ்காரம்" என்று கூறி கை குலுக்கினாள். காரும் பறந்தது.

வாஸந்தியின் சமத்தும், சுறுசுறுப்பும் மைதிலியைப் பிரமிக்கச் செய்தன. அவளையே பார்த்துக் கொண்டு நின்றாள். வாஸந்தி "மாமி! உள்ளே வாங்கோ" என்று அழைத்துச் சென்றாள். அச்சமயமே மூர்த்தி கண்ணைத் திறந்து பார்த்தான். வருத்தம் தாங்காது கண்ணீர் மள மளவென்று வந்துவிட்டது. அருகில் உட்கார்ந்திருக்கும் வேணியின் பரிதாபத்தையும், ராஜூவின் பேந்த பேந்த விழிப்பின் கண்ராவியையும் கண்டு சகிக்காமல் ராஜூவை வாரியணைத்துக்கொண்டபடியே "அக்கா எங்கேடா கண்ணே?" என்றான்.

அதே சமயம் வாஸந்தி சந்தோஷத்துடன் "அம்மா! அப்பா கண்ணை முழிச்சாரா! அப்பாவெ முட்டிய மாடு இவாத்து மாடுதானும்மா! இந்த மாமி வந்திருக்கா பாரு" என்று கூறிக் கொண்டே வரும்போது, மூர்த்தி பேசிய குரலைக் கேட்டு ஆவலே வடிவாய் ஓடி அவனை யணைத்துக்கொண்டு "அப்பா! அப்பா! மயக்கந் தெளிஞ்சு போச்சா! எங்களுக்கெல்லாம் பயம்மாப் போயிடுத்துப்பா! தலெ வலிக்கிறதாப்பா?" என்று கொஞ்சிக் கொஞ்சி கேட்டவாறு தலையையும், முகத்தையும் தடவிக் கொடுத்தாள். மூர்த்திக்கு வாய் திறந்து பேச முடியவில்லை. மவுனமானான். வேணி, மைதிலியை நோக்கி "அம்மா! வாங்கோ; ஒக்காருங்கோ!" என்றாள்.

மைதிலி:—அம்மணீ! இந்த மாதிரி ஒரு விபத்து எங்கள் முரட்டு மாட்டினால் ஏற்பட்டதற்கு நான் ரொம்ப வருத்தப்

13016

படறேன். அடி பட்டுவிட்டதுக்காக ஒரு மன்னிப்புகூடச் சொல்லாமல் அவர் வந்துட்டதாக எங்க வண்டிக்காரன் சொன்னுன். அதனுலே நான் வந்தேன். நீங்க ரொம்ப மன்னிக்கணும், ஏதோ புதிய மாடானதால் இப்படி நேர்ந்தது.

வேணி :—அம்மா! மாடு என்ன செய்யும்? வண்டி என்ன செய்யும்? இப்போ இந்த மாதிரி அனுபவிக்க விதி வலிய வந்தது. அதை யாராலாவது தடுக்க முடியுமா! நீங்கள் இந்த ஏழைமேல் அன்பு வைத்து இந்த குடிசைக்கு வந்ததற்காக நாங்கள் எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

மைதிலி :—இதென்னம்மா ஏதோ தடபுடலா பேசறங்கோ! எங்களாலே இந்த மாதிரி விபத்து வந்ததுக்கு நாங்க தானே மன்னிப்பு கேட்கணும். குழந்தைகளின் பரிதாபத்தெ எங்க வண்டிக்காரன் சொன்னதும் என் மனசுக்கு மிக்க வருத்தமாய் விட்டது. அவர் ஆசையா வாங்கிண்டு வந்த சாமான்கள், பட்டாசுகள் எல்லாம் ரோட்டிலே சிதறிப் போச்சாம். குழந்தைகளுக்கு பட்டாஸ் வாங்கிண்டு வருவார்னு எதிர் பார்த்த ஆவல் எல்லாம் அடியோடு ஒடஞ்சி போயிருக்கும் பாவம்! அம்மா! வாஸந்தீ! இந்தாம்மா! நீயும், தம்பியும் பட்டாஸ் வாங்கி சுடுங்கோ—என்று கூறிக்கொண்டே வாஸந்தியின் கையில் ரெண்டு ரூபாயைக் கொடுக்கப்போனுள்.

வாஸந்தியும், ராஜுவும் இதை வாங்கிக் கொள்வதா, வேண்டாமா வென்று தியங்கியபடியே, தாயாரின் முகத்தை மாறி மாறிப் பார்த்தார்கள். குழந்தைகளின் குறிப்பறிந்த வேணி, சாமர்த்தியமாக மைதிலியை நோக்கி "அம்மா! அதெல்லாம் ஒன்னும் வாண்டாம். பரவாயில்லே. ஒங்க அன்பு என்னிக்கும் இருந்தா அதுவே போதும்." என்றுள்.

மைதிலி :—அம்மா! இந்த ப்ரமாதத்துக்கு பெரிய பெரிய வார்த்தைகள் சொல்வது சரி இல்லெ. கொழந்தைகளின் ஆவல் எவ்வளவு தூரம் இருக்கும்னு எனக்குத் தெரியும். அதனுலெ இதை மட்டும் மறுக்காமெ கொழந்தைகளே வாங்கிக்கச் சொல்லுங்கோ! இந்தாடா கண்ணு! வாங்கிக் கோப்பா!" என்று ராஜுவை

இழுத்து ஆசையோடு மடியில் உட்கார வைத்துக் கொண்டு ரூபாயைக் கையில் வைத்து மூடியபடியே, "இதோ பாரு. அக்காவும் நீயும் பட்டாசு மத்தாப்பு எல்லாம் வாங்கிக்கிங்கோ" என்று கூறினாள். வேணியின் முகத்தை ராஜு பார்க்கும்போது வேணியும் ஒப்புக் கொள்ளும்படி தலை யசைத்ததால் ராஜு பணத்தை வாங்கிக் கொண்டான்.

அவன் முகத்தில் சந்தோஷக் களை ஜ்வலித்தது. ரூபாய்களை மாறி மாறிப் பார்த்தான். அவன் பார்வையும் ஆவலும் வாஸந்திகாவின்மீது தாவியது. அடுத்த நிமிடமே சரேலென்று எழுந்து வாஸந்தி இருக்குமிடம் சென்று விட்டான்.

படுத்திருக்கும் மூர்த்திக்கு இவைகளெல்லாம் காதில் கேளாமலில்லை. ஆனால் அவன் பேச வேண்டும் என்று நினைத்தும் அவனால் பேச முடியாது பாதை ஒரு புறம் தடுத்தது. அன்னிய மாதரோடு பேசும் துடுக்கான சுபாவ மற்ற உத்தமனாகையினால் தியக்கமும் பாதித்தது. அதனால் மவுனமாகவே படுத்திருந்தான்.

மைதிலி குழந்தைகளின் சந்தோஷத்தைப் பார்த்து உள்ளம் பூரித்தாள். பிறகு வேணியிடம் "இந்த வயித்தியர் எங்க குடும்ப வயித்தியர்தான். அவரே தினம் வந்து பார்க்கும்படிச் சொல்லி இருக்கேன். பயப்பட வாண்டாம். நான் போய் வருகிறேன். மன்னிக்கணும்." என்று வணக்கத்துடன் கூறிவிட்டு எழுந்தாள். குழந்தைகள் தூர உட்கார்ந்து என்னென்ன வாங்கலாம்னு பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து பரமானந்தமடைந்த மைதிலி அவர்களின் சந்தோஷத்தைத் தடுக்காமல் போய்விட எண்ணி, வேணியிடம் மட்டும் சொல்லிக் கொண்டு போய் விட்டாள்.

வேணியும், மூர்த்தியும் மைதிலியின் அன்பையும், உதார குணத்தின் அழகையும் பற்றிக் கொண்டாடிப் பேசிக் கொண்டார்கள். இதற்குள் வாஸந்தி ஓட்டமாக ஓடிப்போய் வீதிப் பக்கமுள்ள பட்டாஸு கடையிலிருந்து பட்டாசு பொட்டளம் மத்தாப்பு முதலிய எல்லாம் அரை ரூபாயிக்கு மட்டும் வாங்கிக்

கொண்டு வந்து மீதி ஒன்னரை ரூபாயைத் தாயார் கையில் கொடுத்துவிட்டு "அம்மா! நாங்க பட்டாசு சுடப்போறோம்மா! என்று கொஞ்சியவாறு சொன்னாள்.

**வே**ணி அவர்களைத் தடவிக் கொடுத்து "வாஸந்தி! நீ அப்பா பக்கத்திலேயே இரு. நான் போய் வென்னீர் போட்டு விட்டு வரேன். அப்ரம் எண்ணெ தேச்சு ஸ்நானம் செய்துட்டு சாயங்காலமா பட்டாசு சுடலாம்மா! இப்போ அப்பாக்கு தலை வேதனையாயிருக்கும். ராஜு! அக்காவோடே கூடத்தான் நீயும் பட்டாசு சுடணும்; சமத்தாயிரு" என்று கூறிவிட்டு வேலையை கவனிக்கச் சென்றாள். குழந்தைகளிருவரும் தாயாரின் வார்த்தையைத் தட்ட முடியவில்லை. பட்டாசு சுட வேண்டுமென்ற ஆசையும் நிற்கவில்லை. பட்டாசைக் கையிலேயே வைத்துக் கொண்டு பிதாவின் பக்கத்தில் உட்கார்ந்து அவனைத் தடவிய படியே இருந்தார்கள்.

## 16

**ம**ங்களகரமான எந்த காரியத்தையும் செய்யாமல் விடக் கூடாது என்ற கொள்கையை எந்த காலத்திலும் வேணி கடைப்பிடித் தொழுகுபவளாகையினால் வீட்டிலிருந்த எண்ணெயை சாஸ்திரத்திற்காகக் குழந்தைகளுக்குத் தேய்த்து தீர்த்தமாட்டித் தானும் மங்கள ஸ்நானம் செய்து விட்டு வாஸந்திக்கு தலைவாரிப் பின்னிக் கொண்டிருந்தாள். "சாயந்தரம் பத்து தீபமாவது ஏற்ற வேண்டுமே அதற்கு எம்பெருமான் என்ன விதமாக வழி காட்டப் போகிறார்!" என்று வேணி நினைக்கும்போது, அதையே ஜோஸியத் தாலறிந்து கூறுவதுபோல் வாஸந்தி தன் தாயை நோக்கி "அம்மா! அரை ரூபாய் பட்டாசுக்குப் போனா, மீதி ரூபாய்க்கு எண்ணெ, அகல், திரி, வெத்திலை பழம் எல்லாம் வாங்கி சாயங்காலம் அழகா பண்டிகை பண்ணலாம்மா" என்றாள்.

இதைக் கேட்டதும் வேணியின் மனத்தில் ஆனந்த ஊற்றுப் பெருகியது. அச் சமயம் வண்டிக்கார கருப்பன் ஒரு தட்டும், இரண்டு பாத்திரங்களும் கையில் கொண்டு வந்து வேணியின் உள்ளே வைத்து விட்டு, "அம்மா! எங்க எஜமானியம்மா இதை குடுக்கச் சொன்னுங்க. இதை வாங்கிக்காங்காட்டிப் போனு எங்கம்மாவுக்கு ரொம்ப மனஸுக்கு வருத்தமா பூடுமாம்; கோவம் வருமாம். சொல்லச் சொன்னுங்க. இன்னிக்கு எப்ப டியும் பண்டிகையெ விடாமெ சந்தோஷமா செய்யச் சொன்னுங்க. ஐயாவுக்கு ஒன்னும் பயமில்லென்னு டாக்டரய்யா சொல்லி இருக் காருங்களாம். பயப்பட வாணும்னு அம்மா சொல்லச் சொன் னுங்க" என்று மூச்சுகூட விடாமல் சொல்லி விட்டான்.

தட்டின் மேல் மூடப்பட்டிருந்த துணியை நீக்கிய உடனே அதில் நிறைய வெற்றிலை பாக்கு, மஞ்சள், வாழைப்பழம், தேங்காய், புஷ்பம், அகல், திரி, பட்டாசு பொட்டளம், முந்திரிப் பருப்பு, வெல்லம், கற்பூரம் முதலிய எல்லாம் இருந்தன. தூக்குச் செம்பு களில் நெய்யும், எண்ணெயும் இருந்தன. இவைகளைப் பார்த்து வேணி மலைத்து விட்டாள். குழந்தைகளும் தம்பித்து விட்டன. மூர்த்திக்கோ ஆச்சரியம் கூறத் திறமன்று.

வேணி:—நாம் இப்போ என்ன செய்யறது? அந்தம் மாளுக்குக் கோபம் வரும்னு சொல்லி இருக்காளாமே. நம்ம க்ரக சாரத்தாலெ இப்படி நேர்ந்துதுன்னு அதுக்கு அந்தம்மா என்ன செய்வா பாவம்? இப்படி கல்யாண வரிசைபோலெ அனுப்பி இருக்கிருளே! நீங்க சொல்லுங்கோ—என்று மூர்த்தியை நோக்கிக் கேட்டாள்.

மூர்த்தி:—வேணீ! இவ்வளவு ஆசையா குடுத்தனுப்பினதைத் திருப்பி யனுப்பினு மரியாதை இல்லெ. நன்னு இருக்காது. எல்லாம் ஈசன் செயல்னு எண்ணி வாங்கி வச்சுக்கோ.

வேணி:—(தட்டிலிருந்தவற்றை எடுத்து வேறு தட்டில் வைத்துக் கொண்டே வண்டிக்காரனை நோக்கி) எம்பா! ஒங்க எஜமானருக்கு என்ன வேலையோ?

வண்டி :—வேலையுமில்லே ; வல்லக்காடுமில்லே. எல்லாம் பயிர் பச்செங்கதான்.

வேணி :—அப்படியா ! குழந்தைகளிருக்கா ?

வண்டி :—எஜமானுக்கு ஒரு புள்ளே, ஒரு பொண்ணுங்க. நல்லா இம்பிட்டு ஒசரங்கீதுங்க. பள்ளிகூடத்துலெ படிக்குதுங்க.

வேணி :—ஆச்சரியமா இருக்கே ! உங்க எஜமானி சின்ன பொண்ணு இருக்காளே ! அவளுக்கு அத்தனே பெரிய பசங்கள் இருக்கா !

வண்டி :—அந்த வவுத்தெரிச்சலெ ஏன் கேக்கரீங்க ? அந்தம் மாளுக்கு இப்பதான் 15 வயசாவுதுங்க. மூத்த சம்சாரத்தின் கொயந்தெங்க அதெல்லாம்.

மூர்த்தி :—(சற்று ஆச்சரியத்துடன்) எம்பா ! வண்டிலே இருந்த கிழவர் ஒங்க எஜமானு ! அட ராமா ! ரெண்டு பேருலே யாரு ஒங்க எஜமான் ?

வண்டி :—அந்த கண்ருவியெ கேக்காதிங்க சாமீ ! கொஞ்சம் பருமனு வழுக்கெ தலேயோடெ இருந்தாரே அவருதான் எங்க எஜமான் ; அது ஏதோ அக்ரம கண்ணாலங்க. (மைதிலி கல்யாண வயிற்றெரிச்சலைக் கூறுகிறான்.)

வேணி :—"அடாடா ! இப்படியா அநியாயம் செய்வா ! அந்தப் பாவி அத்தைக்குத்தான் எப்படி மனசு துணிஞ்சுது ? பொண்ணெ பாத்தா பச்செ கிளியாட்டம் இருக்காளே! ஊம். தலே விதி" என்று கூறிக்கொண்டே சாமான்களே எல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு தட்டையும் மற்ற பாத்திரங்களேயும் ஒழித்துக் கொடுத்தாள்.

**வ**ண்டிக்காரனின் முகத்தில் பரிதாபமும் விசனமும் ஜ்வலித்ததை இந்தத் தம்பதிகள் அறியாமலில்லே. பாத்திரங்களே எடுத்துக் கொண்டு, "சாமீ ! போய் வரேங்க. அம்மா ! போய் வரேங்க" என்றான். அப்போது ராஜூவும் வாஸந்தியும் தட்டில் வந்த பட்டாசு பொட்டளங்களே எடுத்துக் கொண்டார்கள். அளப்பரிய சந்தோஷத்துடன், "ராஜூ ! சாமி ரொம்ப ரொம்ப

நல்லவர்டா! நமக்கு பட்டாசு மேலே பட்டாசு அகப்பட்றது” என்ருள் வாஸந்தி.

ராஜுவும் “ஆமாக்கா! சாமிக்கு நம்ப மேலெ நெரெய ஆசை இருக்கு; நாம்ப இன்னிக்கு சாயங்காலம் வெளக்கு ஏத்திப் பூட்டு அப்பாக்கு சீக்கிரம் ஒடம்பு தேவலையாயிடணும்னு சாமியெ நெரெயெ வேண்டிக்கலாம்; வா! அக்கா! நாம் பட்டாசு கட்டு சுடுவோம்” என்ருன்.

வாஸந்தி :—அவசரப்படாதே ராஜு! அம்மா எப்போ வெடிக்கச் சொல்ராளோ அப்பதான் வெடிக்கணும். எல்லாத்தையும் ஒன்ஞ அடுக்கி வைக்கலாம் வா!—என்று கூறிக்கொண்டே ஓடிச் சென்று ஒரு ஓலைப் பெட்டியைக் கொண்டு வந்து அதில் பட்டாசுகளை எல்லாம் அடுக்கி வைத்தாள்.

இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்த கருப்பனின் சந்தோஷம் கூறத் திறமில்லை. மகிழ்ந்தவாறே போய் விட்டான். வேணியும் உத்ஸாகத்துடன் சமயல் வேலையைக் கவனிக்கச் சென்று விட்டாள். குழந்தைகள் பட்டாசின் கவர்ச்சியில் மயங்கி விட்டார்கள். மூர்த்தியின் நினைவோ, பல மைல்களுக் கப்பாலுள்ள தன்னுருயிர்த் தாயாரைத் தேடிக்கொண்டு சென்றது.

“அவளைப் பார்க்க வேண்டுமென்று ஆவலுடன் இருந்ததற்கு அது இம்முறையும் கை கூடாது போய் விட்டதே! தனக்கு இந்நிலைமை ஏற்பட்டதென்று தாயாருக்குத் தெரியுமாயின் அவளுடைய உயிரே போய்விடுமல்லவா! அவளுக்குத் தெரியாதிருப்பதற்கு இன்றே தன் கைப்பட ஒரு கடிதம் எழுதித் தாயைக் கடிதத்தின் மூலமாகவாவது வணங்குவோம்” என்று தீர்மானித்துக் கொண்டு வாஸந்தியைக் கூப்பிட்டு ஒரு காகிதமும், பேனவும் எடுத்துக் கொடுக்கச் செய்து, உடனே எழுதி அதை வாஸந்தியிடமே கொடுத்து, தபால் பெட்டியில் போட்டுவிட்டு வரும்படிச் செய்தான். வாஸந்தியும் ஒரு குதி குதித்துக் கொண்டே கடிதத்துடன் ஓடினுள்.

## 17

நம் பாரத நாட்டில் மக்கள் அனுஷ்டிக்கும் முக்கியமான பண்டிகைகள் பல இருக்கின்றன. அவற்றுள் மிகவும் சிலாக்யமான பண்டிகைகள் சில உண்டு. அச் சிலவற்றுள் கார்த்திகையும் ஒன்றாகும். பல பண்டிகைகள் எண்ணெய் ஸ்நானத்துடனும், விருந்து சாப்பாட்டுடனும் முடிந்துவிடும். மற்றபடி தனித்த செய்கையோ, கண்ணைக் கவரும் காக்ஷியோ ஒன்றும் இருக்காது.

கார்த்திகைப் பண்டிகையிலோ மனத்திற்கு ரம்மியமும், திருவிளக்கேற்றி எம்பெருமானைத் தொழும் நேத்திரானந்தமும், இன்னிசைக் கீதங்கள் அச் சமயத்தில் ஒலிக்கும் ச்ரவணானந்தமும், பட்டாசின் பேரொலியால் குழந்தைகளுக்குப் பேரானந்தமும், பெரியவர்களை எல்லாம் நமஸ்கரிப்பதும், அவர்கள் வாழ்த்துவதும், ஒருவர் வீட்டிற்கொருவர் சென்று சந்தோஷம் விசாரித்து வெற்றிலை, பாக்கு கொடுப்பதும் ப்ரம்மானந்த வைபவமாகவிருக்கும்.

அத்தகைய கார்த்திகைப் பண்டிகை யன்று வேணி, குழந்தைகளுக்கு அலங்காரம் செய்து விட்டுத் தானும் தலைசீவி பொட்டிட்டுக் கொண்டு சாயங்காலம் சுவாமி படத்திற்கு முன்பு மணையிலும், கீழேயும் அழகிய கோலங்கள் போட்டு, மண் அகல், பித்தளை அகல்கள், குத்து விளக்குகள் முதலியனவற்றை எடுத்து வைத்து எண்ணெய் திரி போட்டு, பயபக்தியுடன் அம்பாளை வேண்டிக் கொண்டே திருவிளக் கேற்றினாள். வாழைப் பழம், வெற்றிலை பாக்கு, தேங்காய் முதலியனவற்றை கடவுளுக்கு நைவேத்யம் செய்து விட்டு, அந்த குத்து விளக்குகளைச் சுற்றிப் பிரதக்ஷணம் செய்து பின் எதிரில் மண்டியிட்டு உட்கார்ந்து ப்ரம்மானந்தத்துடனும், பக்தியுடனும் பாட வாரம்பித்தாள். வாஸந்தியும் ராஜுவும் கூட பாடத் தொடங்கினார்கள். கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த மூர்த்தி ஆனந்தத்துடன் மெல்ல எழுந்து கை குவித்துக் கடவுளை வணங்கி, அந்தக் கட்டிலில் உட்கார்ந்த படியே இந்தச் சங்கீதத்தில் ஐக்யமானான்.



ராகம்—ஸாவேரி : தாளம்—ஆதி.

("திருத்தணிகை மலையில்"—என்ற மெட்டு)

பல்லவி

மலர் மங்கையே! புவன ரக்ஷகியே!
மனக் குறையைத் தீராய் கண் பாராய்! (மலர்)

அநுபல்லவி

அலகில் வினைகளை நான் பலவிதம் செய்துள்ளம்
கலங்குகின்றேன் கதி இலை யுன்னை யன்றியே (மலர்)

சரணம்

வகை யறியாமலே திகைத்திடும் ஏழைக்குன்
நகை முகங் காட்டி என்னகத் துயர் நீக்கிட
ஜகதோத் தாரகி! பகைவர்போல் பார்த்திடல்
தகுமோ! உனக்கிது தருமந்தானோ! (மலர்)

என்ற பாடலை அதி உருக்கமாக மூவரும் பாடுவதைக் கேட்டு மூர்த்தி மெய்ம்மறந்து தன் நோய்கள் முற்றும் நீங்கப்பட்டவன் போல் ஒரு வித புதிய உணர்ச்சியும், சக்தியும், ஆனந்தமும் அடைந்து மெல்ல கட்டிலிலிருந்து இறங்கி வந்து திருவிளக்குக்கு முன்னால் விழுந்து நமஸ்கரித்தான். அவனை மீறிய உத்ஸாகத்துடன், "தாயே! ஜகன் மாதா! சர்வலோக ரக்ஷகி! தயாபரி!" என்று வேண்டிக்கொண்டு, கன்னத்தில் அறைந்துகொண்டு, கை கட்டி நின்றான்.

**வே**ணி கற்பூரத்தை ஆலத்தித் தட்டு மத்தியில் ஏற்றி வைத்து வாஸந்தியைப் பிடித்துக்கொள்ளச் செய்து,

கானடா ராகம்—ஏக தாளம்.

(1) "இருளை யகற்றும்—திருவிளக்கே
இன்ப மளிக்கும்—திருவிளக்கே
(2) மங்கள கரமாம்—திருவிளக்கே!
எங்கும் ஒளிரும்—திருவிள்க்கே!
(3) திருமகள் உருவாம்—திருவிளக்கே!
பெருமை பயக்கும்—திருவிளக்கே!

(4) தெள்ளிய ஜோதித்—திருவிளக்கே!
கள்ளனுக்கெமனும்—திருவிளக்கே!
(5) மாலையிலுலவும்—திருவிளக்கே!
ஆலய பூஷணத்—திருவிளக்கே!
(6) சகலரும் போற்றும்—திருவிளக்கே!
சதஸலங்காரத்—திருவிளக்கே!
(7) பாலர்க்கினிக்கும்—திருவிளக்கே!
ஞாலமுவக்கும்—திருவிளக்கே!
(8) பூஜை பெற்றிலகும்—திருவிளக்கே!
ராஜரும்பணியும்—திருவிளக்கே!
(9) தேஜோமயமாம்—திருவிளக்கே!
திருவருள்பெற்றத்—திருவிளக்கே!
(10) இந்துவைப்போன்ற—திருவிளக்கே!
வந்தனம் செய்தேன்—திருவிளக்கே!
(11) அந்தமுற்றேங்கும்—திருவிளக்கே!
எந்தனுக்கருள்வாய்—திருவிளக்கே"

என்ற பாடலைப் பக்தி பரவசமாகப் பாடினார்கள். பிறகு எல்லோரும் ஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்துவிட்டு, விளக்குகளை எடுத்து ஆங்காங்கே வைக்கவேண்டிய இடத்தில் வாஸந்தியும், வேணியுமாக வைத்தார்கள். வீதியில் முற்றும் விளக்கு வைத்த பிறகு, வாஸந்தியும் ராஜூவும் தம் முன்னறி தெய்வங்களாகிய பெற்றோரை வணங்கினார்கள். பிறகு "அம்மா! இனிமே பட்டாசு சுடலாமா! நீயும் கூட இருக்கையா அம்மா!" என்று வாஸந்தி கொஞ்சுதலாகக் கேட்டாள்.

மூர்த்தி:—வேணீ! மெஷினை மூடியிருந்த துணியை எடுத்துவிட்டு அதற்குப் புஷ்பம் போட்டு கற்பூர ஹாரத்தி பண்ணு. இந்த மெஷின்தானே நம்முடைய பிதிரார்ஜித சொத்து. இந்த மெஷின் தானே நம்முடைய குடும்ப வாழ்க்கையின் ஜீவன நாதம். இதுக்கு எந்த நல்ல நாளிலும் மறக்காது பூஜை செய்—என்றான். அவளும் அப்படியே செய்தாள். மூர்த்தி சந்தோஷத்துடன், "சரி! நீ குழந்தைகளை அழைத்துக்கொண்டு போய் பட்டாசு சுடச் சொல்லு" என்றான்.

இதைக் கேட்ட வாஸந்தியும், ராஜுவும் சந்தோஷத்துடன் பட்டாசு வைத்திருக்கும் பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு, தாயின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வீதிப்பக்கம் ஓடினார்கள். வேணியும் சந்தோஷத்துடன் சென்றாள்.

## 18

எல்லா வீட்டு வாசல்களிலும் கோலமும், மாவிலைத் தோரணமும், சில வீடுகளில் மின்சார விளக்குத் தோரணங்களுடன் எண்ணெய் விளக்குகளும் சேர்ந்து ஜொலிக்கும் காட்சி கண்கொள்ளாப் பேரானந்தமாகவும், தெய்வ பக்தியை மக்கள் மனத்தில் இன்னும் அதிகப் படுத்துவதாகவும் இருக்கிறது.

அச் சமயம் தன் உபாத்தியாயினி, வெள்ளைக்கார துரைசானி ஒருத்திக்கு வீதியில் இரு சாரி வீடுகளிலும் செய்திருக்கும் தீபாலங்காரத்தைக் காட்டி, அதன் மகிமையை விளக்கிக் கூறிக்கொண்டே வருவதை வாஸந்தி சற்றுத் தூரத்தில் பார்த்து விட்டதும் பட்டாசு வெடிக்காமல் எழுந்து நின்றாள்.

வெள்ளை மாது:—ஓ! இந்த மாதிரி அலங்காரம் பார்ப்பதற்கு மிகவும் அழகா இருக்கிறதே! இது உங்கள் மத சம்பிரதாயமான உத்ஸவமா! பேஷ்! வெகு நேர்த்தி! வெகு ஆனந்தம்.

உபாத்தியாயினி:—ஆமாம்! இம்மாதிரி வருஷத்துக்கு ஒரு நாள்தான் செய்யறது. இந்த நாள், ஒரு பெரிய பக்தன் பகவானுடைய கிருபைக்குப் பாத்திரமாகிய ஐதீகத்தைக் கொண்டாடும் சந்தோஷ நாள். இந்துக்களுக்கு இது மிகவும் முக்கியமான பண்டிகை. எப்படிப்பட்ட ஏழையாக இருந்தாலும் பத்து விளக்காவது ஏத்தி ஸ்வாமிக்குப் பூஜை செய்யாமெ இருக்கமாட்டா.

வெள்ளை:—இது எப்படி போட்றது? இது ட்ராயிங்கி மாதிரி இருக்கே.—என்று மாவு கோலத்தைப் பார்த்து ஆச்சரியத்துடன் கேட்டாள்.

உபாத்தி :—இதுவும் எங்கள் இந்து தர்மத்தில் முதன்மையானது. தினம் விடிந்தால் எழுந்த உடனே முதல் கடமை இந்த மாதிரி கோலம் இடுவதுதான் முக்கியம். அப்பத்தான் லக்ஷ்மி கடாக்ஷம் வரும் என்று எங்கள் சாஸ்திரம் கூறுகிறது. இது ட்ராயிங்கு மாதிரியான ஒரு சித்திரந்தான். எங்கள் இந்து பெண்மணிகள் ஒவ்வொருவருக்கும் இந்தச் சித்திரம் வராமலிருக்க முடியாது. இதுக்கு ட்ராயிங்கு போடுவதற்கு வேண்டியபடி ஸ்கேலும், மற்ற ஆயுதமும் வேண்டாம். அரிசி மாவில் இப்படி கையாலேயே போடுவது கோணுமல் அழகா வரும். அரிசியை ஊறவைத்து அரைச்சு மாக்கோலம் போட்டா இதோ இப்படி வரும்—என்று மாக்கோலத்தைக் காட்டினுள்.

வெள்ளைக்கார மாது இந்தக் கோலங்களைப் பார்த்து அபாரமான சந்தோஷத்துடனும், ஆச்சரியத்துடனும் நின்றுள். பிறகு "மேடம்! இந்த மாதிரி போடுவது ரொம்ப கஷ்டம். ஆச்சரியம்! வெகு அழகாக இருக்கிறது. எனக்குப் போட்டுக் காட்டி கற்றுக் கொடுக்கிருயா! எனக்கு மிகவும் ஆசையா யிருக்கிறது" என்றுள்.

உடனே உபாத்தியாயினி சந்தோஷத்துடன் "ஓ! அப்படியே ஆகட்டும். இதோ! இப்போதே போட்டுக் காட்டுகிறேன்....அதோ அந்த வீட்டில் நிற்கும் பெண் என் க்ளாஸில் படிக்கும் மாணவி தான். அத்தனை சின்ன பெண் கூட இந்த மாதிரி சித்திரம் போடுவாள். எங்கள் நாட்டினற்கு இது சர்வ சகஜம்" என்று கூறிக்கொண்டே வாஸந்தியின் வீட்டுப் படி ஏறினுள்.

இவர்களையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த வாஸந்தி சந்தோஷத்துடன் வாத்தியாரம்மாளை வரவேற்று, 'வாங்க டீச்சர்! இவா யார் டீச்சர்?' என்றுள்.

உபாத்தி :—'வாஸந்திகா! உள்ளே போய் சீக்கிரமா கோல மாவு கொண்டு வா'—என்றுள். வாஸந்தி ஓட்டமாக ஓடிச்சென்று அரிசி மாவும், அரிசி அரைத்துக் கரைத்த மாவும் இரண்டும் கையில் கொண்டு வந்தாள். உடனே வாத்தியாரம்மாள், 'வாஸந்தீ! நீ ஒரு அழகிய தாமரைப் பூக் கோலம் போடு. இந்தம்மாள் பார்க்கணுமாம். எங்கே! சீக்கிரம் போடு பார்க்கலாம்' என்றுள்.

உடனே வாஸந்தி திண்ணையின் கீழே உள்ள இடத்தில் நன்றாகத் துடைத்துவிட்டு ஒரு பக்கம் பொடிக் கோலமும், ஒரு பக்கம் மாவு கோலமும் கிடுகிடுவென்று நிமிடத்தில் போட்டு விட்டாள். இதைக் கண்ட வெள்ளைக்கார மாதின் ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. மாவைத் தான் வாங்கி அதே மாதிரி கோலம் போட்டுப் பழகிக் கொள்ள முயன்றாள்.

மேனாட்டவர்களுக்கும், நம் நாட்டவர்களுக்கும் உள்ள வித்யாசம் இதுதான். மேல் நாட்டினர் எந்த ஒரு அதிசயமானதைப் பார்த்தாலும் அதையோர் பிரமாதமாக மதித்து அதைச் செய்து பார்க்கும் முன்னறிவும், விசால புத்தியும் கொண்டு செய்து வெற்றியை அடைகிறார்கள். நம்மவர்களோ, சர்வ சாதாரணமாய்ச் செய்யக் கூடிய முக்ய காரியங்களையும் செய்யாமல் விட்டுவிட்டு தோல்வி அடையும் நிலைமைக்கு வந்து விடுகிறார்கள். இதே கோலமிடும் கடமை மிகச் சிறந்ததாக உள்ள பாரத நாட்டின் நாரீமணிகளில் எத்தனை பேர்களுக்கு ஒரு இழை பிடித்து இழுக்கவும் தெரியாமல் இன்னமும் இருக்கிறார்கள் என்பதை நினைக்க வருந்தாமலிருக்க முடியவில்லை.

இதே கோலம் போடுவதில் எத்தனை அருமையான உருவங்களை எல்லாம் அபூர்வமாக சிருஷ்டித்து வர்ணங்கள் முதல் கொடுத்து சித்திரம் வரையும் நாரீமணிகளும் நம் நாட்டில் இப்போதும் விளங்குகிறார்கள். அவர்களின் சித்திரங்களைக் கண்டு மனம் பூரிக்கின்றது. இத்தகைய அருமையான சித்திரத்தைக் கண்ணாரக் கண்டு களிப்பதுடன் நாம் நின்று விடுகிறோம். ஆனால், அதை மேனாட்டார் கண்டால் கற்றுக் கொள்ளவே முதலில் முயற்சிப்பார்கள்.

இந்தக் கோலத்தைக் கண்டு அபாரமான சந்தோஷமடைந்த வெள்ளை மாது வாஸந்திகாவின் கைகளைக் குலுக்கி, அதற்காகத் தன் அன்பு நிறைந்த முத்தமிட்டுப் பின்னர் தன் ஜேபியிலிருந்த ஒரு பவுன்டன் பேனாவை அவளுக்குப் பரிசாகக் கொடுத்தாள். வாஸந்தி உபாத்தியாயினியின் முகத்தைப் பார்த்தாள். உபாத்தியாயினி வாங்கிக் கொள்ளும்படி கண் ஜாடை காட்டியதால்,

வாஸந்தி அதை வாங்கிக் கொண்டு, துரைசானிக்குப் பிரதி வந்தனம் கூறினாள்.

பேனா கிடைத்த சந்தோஷம் வாஸந்தியின் ஆனந்தத்தை அதிகப்படுத்தியது. உபாத்தியாயினி, "சரி; நாம் போகலாமா?" என்றாள். பிறகு "வாஸந்தி! இந்தப் பேனாவை ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளு. உன் சித்திரத்திற்காக பரிசு வந்த பேனாவானதால் ரொம்ப பத்திரமாக வெச்சுக்கணும்" என்று கூறிய பின் இன்னும் மற்ற வீட்டு விளக்குகளையும் அலங்காரங்களையும் பார்த்துக் கொண்டே போய் விட்டார்கள். வாஸந்தி அந்தப் பேனாவைத் தன் பிதாவுக்குக் காட்டுவதற்காகத் தூக்கிக் கொண்டு உள்ளே ஓடினாள். வேணி சந்தோஷ பிம்பமாய் விளங்கினாள்.

## 19

மைதிலி, வேணி வீட்டிலிருக்கும்போதே அவர்களுக்குத் தங்களால் நஷ்டமாகிவிட்ட சாமான்களுக்கு ஈடு செய்து அவர்களைப் பண்டிகையை நடத்தும் படிக்குச் சொல்லி யனுப்பிவிட வேண்டும். இப்போது கையில் கொடுத்தால் வாங்கமாட்டாள்; மறுத்து விடுவாள்—என்று தீர்மானம் செய்துவிட்டா ளாகையினால், அந்த எண்ணத்தை வெளியில் சொல்லாமல் வண்டியிலமர்ந்து வீட்டிற்கு வந்திறங்கினாள்.

அப்போது வீதித் திண்ணையின்மீது கிழவர் உட்கார்ந்து பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார். வாயில் நிறைய புகையிலையுடன் கூடிய தாம்பூல ரசம் நிறைந்து போய் வாய் மேல் தூக்கி ராமதூதன் சாயலாக உப்பி விட்டது. அருகில் நின்ற மீனாட்சியை நோக்கி புகையிலை அடக்கத்துடன் பேசும் பரிபாஷையில் வழ வழ கொழ கொழ அகராதியுடன் "எழ்டீ! அவ எங்கே போனாழீ?" என்று கேட்டார்.

மீனாட்சி:—வண்டிக்கார கரப்பங்கிட்ட என்னமோ பேசிண்டிருந்தாப்பா! யாரோ பாவம் விழுந்து அடிபட்டு தாமே, அவாளெ பாக்க ஒருவேளை போனாளோ என்னமோப்பா! யாருக்குப்பா அடிபட்டது?

கிழவர்:—ஆழ்ழ்ஹா! அப்பழியா சேழி....என்று கோபம் தலைக்கேறிவிட்டது. கையிலிருந்த பத்திரிகையை விசிறி எறிந்து விட்டு முகத்தையும் கைகளையும் ஆட்டி ஆட்டி விழித்தார். வாயைத் திறந்து பேசவோ, வாய் நிறைய புகையிலைச் சாறு திணிக்கப்பட்டு விட்டது. தர்மசங்கடமான நிலைமையிலிருக்கும்போது மாட்டு வண்டி வந்து நின்றதும், மைதிலி சடக்கென்று இறங்கி ஓர் பறவை யைப்போல் பறந்து உள்ளே போய்விட்டாள்.

அவசர அவசரமாகக் கிழவர் திண்ணையை விட்டு, முறைத்துப் பார்த்துக்கொண்டே இறங்கின வேகத்தில் வேஷ்டியின் கச்சம் அவிழ்ந்துவிட்டது. அதைச் சரியாகச் சொருகிக்கொண்டு நிமிரும்போது வண்டிக்கார கருப்பன் வண்டியில் போட்டிருந்த ஜமுக்காளத்தை எடுத்துக்கொண்டு உள்ளே போகப் படி ஏறினான்.

கிழவர் ஆத்திரத்துடன் "எழ்ண்டா! முழ்ழாள் பயழே!.... அவ எழ்கேழா போய் வழ்தா?" என்று கருப்பனைப் பார்த்து முறைப்பாகக் கேட்கும்போது ஆத்திரத்தின் வேகத்தினால் மகா அடக்க ஒடுக்கத்துடன் வாய்க்குள் இருந்த புகையிலையின் ரசம் குபீரென்று அவரையும் அறியாமல் வெளிக் கிளம்பி கருப்பனுக்கு அபிஷேகம் செய்வித்ததுபோல் அவன் முகத்தில் பீறிக்கொண்டு வந்துவிட்டது.

கருப்பன் திடுக்கிட்டுப் போய் "ஐயோ!" என்று வாய் விட்டும் சொல்லிவிட்டான். அவன் இவர்கள் வீட்டில் வெகு நாட்களாக இருக்கும் பழைய ஆளாகையினால் எல்லோருக்கும் அவனிடத்தில் அதிக நம்பிக்கையும் மதிப்பும் உண்டு. அவன் இவ் வீட்டிற்கு வேலைக்காரன் என்ற பெயரே யன்றி, சகல விதத்திலும் வீட்டுக்கு அக்கரையுடன் உழைக்கும் பெருந்தன்மையான குணம் வாய்ந்த சொந்தக்காரன் போலவே இருப்பவன்.

அவன் முகத்தில் எச்சில் விழுந்த உடனே மீனாட்சி, "ஐயையோ! என்னப்பா கருப்பன்மேலே துப்பிட்டேளே!

ஐயோ பாவம்! கருப்பா! போய் மூஞ்சியை அலம்பிண்டு வாடா !" என்று தன் அனுதாபத்தைக் காட்டினள். கருப்பன் துணியால் மூஞ்சியைத் துடைத்துக்கொண்டபடியே, "எஜமான்! இது என்ன வேலெங்க. எம்மூஞ்சியே சாக்கடென்னு நெனச்சுக்கிட்டீங்களா! நல்ல வேளெ அம்மா முஞ்சிலே துப்பாமெ இந்த நாயி மூஞ்சிலே துப்பினீங்களே அதுவே போதுங்க" என்று கூறிக்கொண்டே வாசப்படி தாண்டப் போனன்.

இதற்குள் கிழவர் கருப்பனைப் போக விடாமல் கையைப் பிடித்து நிறுத்தித் தடுத்துவிட்டு, வாயிலிருப்பதை பூராவும் கீழே துப்பிவிட்டு, "ஏண்டா ஒனக்கு ஒடம்பு திமிர் ரொம்ப அதிகமாய் போயிடுத்தோ! அந்தச் சிறுக்கியை எங்கே அழைச்சிண்டு போயிட்டு வந்தே. நெஜத்தைச் சொல்லிப்புடு" என்று கடுமை யான தொனியில் கேட்டார்.

கருப்பன்:—இதென்ன எஜமான் இப்பிடி கேக்கரீங்க. அம்மா எங்கே போயிட்டாங்கன்னு நெனச்சுகிட்டீங்க. வண்டிமாடு முட்டி அந்த ஆளு உயிந்துட்டாக்கா நீங்க பேசாமெ வந்துட்டீங்க. அம்மா மனசு கேக்கலெ பாவம். அவுங்க வூட்டுக்குத்தான் போயி அவங்களுக்குத் தேருதலு சொல்லிப்புட்டு மன்னிப்பு கேட்டுகிட்டு வந்தாங்க. இதுலே என்னுங்க தப்பு—என்று ச்வாதீனமாகவே கூறினன்.

கிழவர் :—'ஆ! அப்படியா சமாசாரம். அம்மாளுக்கு அப் படியே கருணை மழை பொழிஞ்சூட்டுதா! அடேய் கருப்பா! ஒனக்கு வாயும் துணிச்சலும் அதிகமாய்ப் பூடுத்துடா! நீ என்ன செய்வே? அந்த நீலி குடுக்கர எடம்டா! எடம்' என்று கூறிக் கொண்டே ஆவேசத்துடன் உள்ளே சென்றார்.

மைதிலி இங்கு நடப்பவைகளைக் கேட்டுக்கொண்டே ஊஞ் சலில் உட்கார்ந்திருந்தாள். கிழவர் ஆத்திரத்துடன் "ஏண்டி! பத்ரகாளீ! எனக்கில்லாத கருணை உனக்கு ஊத்து எடுத்துப் போச்சோ! நித்தியம் எத்தனையோ பிச்சைக்கார நாய்கள் ரோட் டில் போகும் வண்டியில் அகப்பட்டு சாறதுகள். அதுக்கெல்லாம் நீ தயா ரக்ஷகியா காப்பாத்தக் கிளம்பிட்டயோ? ஆ! அத்தனை

தைரியமாடீ உனக்கு? இத்தனெ பெரிய மனுஷன் பேசாம இருக்கச்சே ஒன்னெ யாருடீ பெருதனம் பண்ணி அந்தப் பிச்சக்கார நாய் வூட்டுக்குப் போகச் சொன்னது?'' என்று தாறுமாறுமாகக் கூச்சலிட்டுக்கொண்டே சற்றும் தாக்ஷண்யமின்றி மைதிலியைத் தடார் தடார் என்று அடித்துவிட்டார்.

**பொ**றுமைக்கு இருப்பிடமாகிய மைதிலி சற்றும் அசையவுமில்லை; வாயைக் கூடத் திறக்காமல் கல்லுபோல் உட்கார்ந்திருந்தாள். அவள் அவ்வாறு உட்கார்ந்திருப்பதைப் பார்த்து கிழவருக்கு இன்னும் ஆத்திரம் அதிகரித்துவிட்டது. “ஆஹா! என்னை ஒரு மனுஷன்னு பாத்தியா! பூச்சி, புழுன்னு நெனச்சியா? அசையக்கூட இல்லாத கல்லு மாதிரி ஒக்காண்டிருக்கியே. முன்னே பின்னே தெரியாத வீட்லே ஒனக்கென்னடீ வேலெ? மலையாட்டம் நான் இருக்கச்சே ஒட்டசாண் சிறிக்கி ஒனக்கென்னடீ தைரியம் வந்துடுத்து?'' என்று ஊஞ்சலில் உட்கார்ந்திருக்கும் மைதிலியின் தலை மயிரைப் பிடித்திழுத்து முதுகில் தாறுமாறாக அடித்தார்.

**மை**திலி அப்போதும் கிழவனை நேரில் பார்க்காமல் எங்கேயோ பார்த்தபடியே, “ஆமாம். மலைபோல் மனிதராக இருக்கிறதனாலேதான் மலைபோல் தப்பு பண்ணிப்புட்டு, மலை வாய்திறக்காதது போல நீங்களும் வாய் திறக்காமெ வந்துட்டங்கோ! அந்தப் பாபத்துக்கு நான் போய் மன்னிப்பு கேட்கறது தப்புதான். தேகம் மலைபோல இருந்தால் பிரயோஜனமென்ன? நல்ல புத்தியும், குணமும் மலைபோல இருந்தா உபயோகமுண்டு'' என்று கூறிக்கொண்டே சடக்கென்று உள்ளே போய்விட்டாள்.

**அ**து வரையில் ரேழி மறைவில் நின்று பாத்துக்கொண்டிருந்த எதிர்வீட்டுக் கிழவர் மெல்ல கூடத்திற்கு வந்து, “என்டா வேதாசலம்! ஒனக்குக் கொஞ்சம் கூட புத்தியே இல்லெ. இப்படி அடிக்காதே; அடிக்காதே: அடிச்சா ஆபத்தா முடியும். எம் மூணும் எளையாளெப்போல ஓடிப்பூடுவான்னு ஒனக்குப் பதனாயிரந் தரம் சொன்னேனே. அது ஒறெக்கலையா! அடிச்சு அதிகாரம் பண்ணுதேடா! பேசாமெ இருந்து தொலெ. இன்னிக்குக் கார்த்தி

கையும் நல்ல நாளுமா ஏன் இப்படி பண்றே" என்றார். கிழவர் தலையைத் தடவிக்கொண்டும் தொந்தியைத் தடவிக்கொண்டும் கோபத்துடன் நின்றார்.

நாம் முன் தெரிவித்ததுபோல் மைதிலி சாமான்களைக் கருப்பனிடம் கொடுத்தனுப்பிவிட்டுப் பின்னர் தன் மூத்தாளின் மகளுக்குத் தலை சீவி சிங்காரித்தாள். அவள் மட்டும் பழைய உடையுடன் அலங்காரமற்றத் தன்மையில் இருப்பதைக் கண்ட மீனாட்சிக்கு மைதிலியை அலங்காரம் செய்துகொள்ளும்படிக் கூற வேண்டுமென்ற ஆசை அடித்துக் கொள்கிறது. ஆனால், என்ன சொல்வாளோவென்று பயமாகவும் இருக்கிறது. ஆதலால், மெல்லத் தயங்கியவாறு 'சித்தீ! சித்தீ!' என்று கூப்பிட்டாள். அதற்கு மேல் சொல்லமாட்டாது நின்றாள்.

மீண்டும் அவள் கையைத் தடதடவென்று பிடித்து இழுத்துக்கொண்டுபோய் "சித்தீ! எங்கம்மா படத்தெப் பாரேன். எத்தனை அலங்காரம் பண்ணிண்டு இருக்கா? நீயும் இந்த மாதிரி ஏன் சித்தி அலங்காரம் பண்ணிண்டு படமெடுத்துக்கக் கூடாது?" என்று கொஞ்சலாகக் கேட்டாள்.

மைதிலியின் கண்ணில் ஜலம் தடதடவென்று வந்து விட்டது. அந்தப் படத்தைப் பார்க்கும்போது மைதிலிக்குத் தாங்கமுடியாத ஆத்திரமே உண்டாயிற்று. 'இந்தப் படுபாவி செத்ததனாலன்றோ என் தலையெழுத்து இம்மாதிரியாயிற்று. இந்தப் பாவி ஏன் சாகணும்' என்ற வெறுப்பும், விரக்தியும் அபாரமாகப் பொங்கி எழுந்ததால், அவள் சடக்கென்று முகத்தைச் சுளித்துக் கொண்டு, "ஆமாம். என்னை இந்தக் கதி ஆக்ரத்துக்குத்தான் இந்தப் பாவி இப்படி அலங்கார சுந்தரியா இருக்கா! எனக்கு அலங்காரம் எப்போ பண்ணுவா தெரியுமா? என் சரீரத்தை விட்டு ஆத்மா போய்விட்டப்பறம் தடபுடல் அலங்காரம் ஒங் கப்பா செய்வா. அப்போ நீயும் பாக்கலாம்........வா....வா........ நாழியாச்சு. திருவிளக்கு ஏத்தலாம் வா!" என்றாள்.

அதற்குமேல் மீனா ஒன்றுமே பேசமாட்டாது தும்பித்து விட்டாள். சிறுமியாகையால் விவரித்துப் பேசவும், விஷயத்தை

யறிய சக்தியும் இல்லாது போய் விட்டது. ஆகையால், பேசாமல் மைதிலியுடன் சென்றாள். மைதிலி கண்ணீர் பெருகிய வாறு பகவானைத் தோத்திரம் செய்தபடியே அம்பாளையும் தோத்திரம் செய்து நெஞ்சை யடைக்கும் துக்கத்துடன் பாடிய படியே திருவிளக்கேற்றிக் கற்பூர ஹாரத்தி செய்து வணங்கி, பின்னர் மீனுவுடன் விளக்குகளை ஆங்காங்கே வைக்கவேண்டிய இடங்களில் நிறையவும் அலங்காரமாயும் வைத்தாள். அவள் மனத்தில் வேண்டிக் கொள்வதெல்லாம் தனது முடிவைச் சீக்கிரத்தில் கடவுள் கொடுக்க வேண்டும் என்பதுதான்.

கார்த்திகைப் பண்டிகையின் தீபாலங்காரத்தை இரண் டிடங்களில் பார்த்தோம். ஒன்று பரம ஏழைகளாயினும் மனப் பூர்வமான ஒற்றுமையுடன் கூடிய குடும்பத்தினராதலால் பாலும் தேனும்போல எல்லோரும் ஒருமனப்பட்டு தீபாலங்காரமும் பூஜையும் செய்தார்கள்.

மைதிலியின் குடும்பத்திற்கு ஏராளமான செல்வமிருந்தும் எதற்கு உபயோகமாயிற்று? கிருஹலக்ஷ்மி என்ற ஸ்தானத்தில் இருந்தும் எந்த விதத்திலாவது 'சந்தோஷம் உண்டா? மன நிம்மதி உண்டா? ஒன்றுமில்லை. உதவாக் கட்டையைப்போலவே அவள் தன்னை எண்ணி விட்டதால் அவளையே அவள் வெறுப்பது தான் அவள் பிறவியின் சந்தோஷமாயிற்று. அந் நிலைமையில் ஓர் தூணில் சாய்ந்து கொண்டிருந்தாள்.

தீபாவளியன்று விடியற்காலம் ஸ்நானம் ஆனதும் ஒவ் வொருவரும் சிநேகிதர்களையும், உறவினர்களையும் கண்டு, "கங்கா ஸ்நானம் ஆயிற்றா!" என்று கேட்டு க்ஷேமம் விசாரிப்பதுபோல், கார்த்திகைப் பண்டிகைக்கு முக்யமாக பெண்களும், பெண் குழந்தைகளும் தங்கள் தங்கள் சொந்தக்காரர்கள், சிநேகிதர்கள் முதலியவர்கள் வீட்டிற்குச் சென்று, பெரியவர்களாயின் சேவிப்ப தும், தீபாலங்காரம் ஆயிற்றா வென்று கேட்பதும், பெரியவர்கள் "ஜோதிச்சுடராய் உங்கள் குடும்பம் ப்ரகாசிக்க வேண்டும்" என்று வாழ்த்துவதும் சம்பிரதாய மாகையினால் இன்றும், நாளையும் கர்னாடக வழக்கத்தைக் கையாளுபவர்களின் வீடுகளில் இம் மாதிரி நடந்து வருகின்றது.

அதேபோல் சில பெண் பிள்ளைகள் மைதிலியின் வீட்டிற்கு வெற்றிலைப் பாக்கிற்கு வந்தார்கள். மீனுவும் மைதிலியுமாக அவர்களுக்கு வெற்றிலைப் பாக்கும், பொரி உருண்டை, முந்திரிப் பருப்பு உருண்டை முதலியனவும் கொடுத்து அனுப்பினுர்கள்.

## 20

வேணி எல்லா அம்சங்களிலும் கர்னுடக சம்பிரதாயத்தை அனுஷ்டிப்பவளாதலால், ராஜுவை மூர்த்தியிடம் உட்கார வைத்து விட்டு, வாஸந்தியுடன் மைதிலியின் வீட்டிற்கு மஞ்சள் குங்குமத்திற்கு வந்தாள். வரும்போதே வீதியில் உட்கார்ந்திருந்த கிழவரைப் பார்த்ததும் வேணிக்குத் திக்கென்று தூக்கி வாரிப்போட்டது. "ஐயோ! இந்தக் கிழவர்தான் வீட்டு எஜமானர்போலிருக்கே!" என்று தனக்குள் நினைத்துக் கொண்டு மைதிலிக்காக பரிதாபப் பட்டபடியே உள்ளே வந்தாள்.

மைதிலி தன் கையைக் கன்னத்தில் ஊன்றிக் கொண்டே விசனம் நிறைந்த பாவைபோல் நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். வாஸந்தி அன்று ஒரு வேளை பார்த்ததிலிருந்தே வெகு நாட்கள் பழகியவளைப்போன்ற தாராளமான சுபாவத்துடன் "மாமீ!" என்று அழைத்துக் கொண்டே மைதிலியின் முன்பு சென்று அவளை நமஸ்காரம் செய்து, "மாமி! விளக்கேத்தி யாச்சா?" என்றுள்.

இவளுடைய சமத்தும் பரபரப்பும் மைதிலியின் மனத்தைக் கவர்ந்தன. இவர்கள் வருவார்களென்று அவள் சற்றும் நினைக்கவில்லையாதலால், தன் விசனத்தில் இவர்களைக் கண்டது பெரும் சந்தோஷமாக மாறியது. உடனே வாஸந்தியை இறுகத் தழுவி கட்டிக் கொண்டு, "விளக்கு ஏத்தியாச்சுடீ கண்ணு! தீபத்தின் ஒளியைப்போன்ற உயர்ந்த ஆமடியான் உனக்கு வரணும்; உன்

11

குடும்பம் தீப ஜோதிபோல் ப்ரகாசிக்கணும்" என்று மனமார வாழ்த்திய பின்னர் "ஒக்காருங்கோம்மா! அவருக்கு இப்போ தேவலையா? சாதாரணமா யிருக்காரா! நீங்க வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு. மீனு! நான் காலையிலே சொன்னேனே அந்தப் பொண்ணு இவதான்" என்று மீனுவை அழைத்து வாஸந்தியை அறிமுகம் செய்து வைத்தாள்.

மீனு வாஸந்தியை உற்று நோக்கி, குழந்தைகளின் சுபாவப் படிக்கு, "நீ எத்தனை பொட்டளம் பட்டாசு சுட்டே! என்னென்ன வாணம் வாங்கி இருக்கே! எந்தப் பள்ளிக்கூடத்திலே படிக்கிறே. எத்தனுவது க்ளாஸ் படிக்கிறே" என்று விசாரித்தாள். வாஸந்தி "நான் நாலாவது க்ளாஸ் படிக்கிறேன். என் தம்பி ஒண்ணுங் கிளாஸ் படிக்கிறான். நாலு பட்டாஸ், ஒரு பொட்டி மத்தாப்பு எல்லாம் சுட்டேன். நீ எத்தனுவது படிக்கறே?" என்றாள்.

மீனு:—நான் ஆறுவது படிக்கிறேன். ஒங்கப்பாக்கா காத்தாலெ அடிபட்டுது! இப்ப ஒண்ணுமில்லெயெ.

வாஸந்:—வலிக்கிறதுங்கிரா! ஆனு ஒக்காண்டு செத்த நேரம் பேசினு.

மைதிலி:—அம்மா, வாஸந்தி! ஒனக்குப் பாட்டுத் தெரியுமா! தெரிஞ்சா ஒண்ணு பாடேன்.

வாஸந்:—இதோ பாட்ரேன் மாமீ!

பேகடா ராகம்—சாபு தாளம்.

பல்லவி

முன்னர் நான் செய்த வினை பின்னர் மூண்டதோ! தாயே!
என்ன செய்வேன் அம்பிகே! (முன்)

அநுபல்லவி

உன்னை யல்லால் வினை ஒழிக்க வல்லாருண்டோ?
இன்னும் தாமதம் செய்தால் என்னுயிர் நீங்கிடும். (முன்)

சரணம்

இன்னில மக்களின் இன்னல்கள் போக்காமல்
கன்னெஞ்சம் போன்று நீ கவலை யற்றிருந்திடில்
அன்னை என்ற மகிமை உன்னைவிட் டகன்றிடும்
துன்னிய வருள் செய்தேன் துன்பத்தைத் தீர்த்திடாய். (முன்)

என்று அழகாகப் பாடி முடித்ததும், "மாமீ! இது எங்க பள்ளிக் கூடத்திலெ ட்ராமா போட்டபோது எனக்குச் சொல்லிக் குடுத்தா. நான் இதைப் பாடி நடிச்சேன். எல்லாரும் கை தட்டி சந் தோஷப்பட்டா மாமீ! இவ பள்ளிக்கூடத்திலெ நாடகம் நடிச் சிருக்காளா!" என்று மீனுவைக் காட்டிக் கேட்டாள்.

இந்தப் பாட்டின் குரலைக் கேட்டு உள்ளே வந்த கிழவர், மைதிலி வாஸந்தியைத் தடவியவாறு உட்கார்ந்திருப்பதையும் வேணியுடன் அன்பாய்ப் பேசுவதையும் பார்த்து, அசாத்யமான கோபம் அடைந்து விட்டார். தான்தான் வீட்டுக்காரர் என்றும், தன் மனைவியை அதிகாரம் செய்யும் கம்பீரத்தை நான்கு பேர் முன்னிலையில் தான் காட்ட வேண்டுமென்றும் சில அற்பர்கள் நினைத்துக்கொண்டு, அம்மாதிரியே செய்கிறார்கள். அதனால் அவர்களுக்கு ஏதோ பெரிய மதிப்பும் பெருமையும் வந்து விட்டதாக அந்த ஜம்பக்காரர்கள் நினைத்துச் செய்வதானது அவர்களையே பிறர் வெறுக்கும்படியும், தூஷிக்கும்படியும் செய்து விடுகிறதென்பதை அந்த அற்பர்கள் அறிவதில்லை.

அந்தக் கோஷ்டியில் முதல் தாம்பூலம் பெற்ற கிழவர், தொண்டையைப் பெரிதாகக் கனைத்துக் கொண்டு, "அடீ! மைதிலீ! என்னடீ ஒக்காண்டு அரெட்டெ அடிக்கிரெ! கூத்துப் பாட்டும், தன்னானே பாட்டும் பாட இது என்ன வீடுன்னு நெனெச்சிண்டயா! தெருக்கூத்து கொட்டாயின்னு நெனச்சிண் டயா! இது யாருடீ!" என்று கேட்டு முடிப்பதற்குள், மீனு எழுந்து ஓடி வந்து, "அப்பா! கோச்சிக்காதெப்பா! இன்னிக்குக் காத்தாலெ நீ வண்டிலெ போகச்செ மாடு யாரையொ முட்டிடுத் துன்னு சொன்னெயே. இந்தப் பொண்ணுடெ அப்பாதானும்பா அது; இந்தப் பொண்ணு ரொம்ப நல்ல மாதிரியா இருக்காப்பா! இவா அம்மாவாம் அந்த மாமி. நன்னா பாட்ரா பாருப்பா!" என்று கூறியது.

இதைக் கேட்டதும் கிழவரின் ஆத்திரம் தலை தூக்கித் தாண்டவமாடக் கிளம்பி விட்டது. வேணி இருக்கும் திசையை நோக்கினார். கிழவரைக் கண்டதும் அவள் மரியாதையாய்

எழுந்து ஒதுங்கி நின்ருள். மைதிலியையும் கிழவரையும் பார்க்கப் பார்க்க அவள் மனம் கலங்கி, "ஐயோ! பாவமே!" என்ற பரிதாபத்துடன் சங்கடப்பட வாரம்பித்தது. "இந்தக் கிழட்டுக் கட்டெடலே போரவனை இவ்விளங் குமரி எவ்விதம் தான் பதியாக மனத்திலாவது நினைக்க முடியும்?" என்று வேணி நினைக்கும் போது அளவிலாத வெறுப்பு அவள் முகத்தில் ப்ரகாசித்தது.

மைதிலியோ, தலையையும் நிமிரவில்லை. இந்தக் கிழம் ஆத்திரத்தில் என்ன திட்டி விடுமோ! என்ன செய்து விடுமோ என்கிற பயத்தினுல் அவள் சடக்கென்று, "அம்மா! உள்ளே வாருங்கள்" என்று கூறியவாறு வேணியையும், வாஸந்தியையும் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு பக்கத் தறையில் புகுந்து விட்டாள்.

குழந்தை வாஸந்தி ஒன்றுமே தெரியாமல் விழிக்கின்றது. கிழவர் கோபிப்பதை மட்டும் அறிந்தாளே யன்றி, ஏன் கோபிக்கிருர் என்ற விவரம் தெரியாமல் விழிக்கையில் தன்னை மைதிலி அழைத்துச் சென்றதால் உள்ளே போய் விட்டாள். எனினும் அவள் உள்ளேயே நிற்காமல் தலையை வெளியே நீட்டி நீட்டி எட்டிப் பார்த்தாள்.

அப்போது கிழவர் தலையில் அடித்துக் கொண்டு முகத்தைச் சிணுக்கி கையை நெளிப்பதையும், வாய் முணு முணுப்பதையும் கண்டு மிரண்டுபோய் மைதிலியை நோக்கி, "மாமீ! அந்த தாதா வுக்கு ஏன் இப்படி கோபம் வரது. அதோ பாருங்கோ! தலையி லடிச்சிண்டு என்னமோ பண்ராரே! நாங்க வந்தது அவருக்குப் பிடிக்கலையா? அவரே பாத்தா என்னெ அடிச்சிடுவாபோல இருக்கே. அம்மா அம்மா! நாம்ப ஆத்துக்குப் போயிடலாம் வாம்மா!" என்று தாயாரைக் கூப்பிட்டுப் பின்னும் எட்டிப் பார்த்தாள்.

பிசினரிக் கிழவன் "கார்த்திகைக்காக ஏத்தி இருந்த விளக்குகள் எத்தனை நாழி எரியும். எண்ணெய் பாழாப்போறது" என்று கூறிக்கொண்டே சில விளக்குகளைக் கையால் அணைப் பதையும், சிலவற்றை வாயால் ஊதி அணைப்பதையும் பார்த்தாள்.

சிறுமியாயிருப்பினும் வாஸந்திக்கு இச் செய்கை மிகவும் ஆச்சரியத்தை உண்டாக்கியது. குழந்தை சுபாவத்துடன் பயத்தை மறந்து திடீரென்று கிழவரிடம் ஓடி வந்து, "தாதா! எத்தின வௌக்கெ இப்படி அணைச்சாக்கா பாவம்னு எங்க வாத்தியாரம்மா சொல்லி இருக்காளே! கார்த்திகை பண்டிகைக்கு எத்தின விளக்கை அணைக்கிறீரே இது பாவமில்லெ?" என்று கேட்டு விட்டாள்.

கிழவர் சீறி விழும் கடுவாம் பூனைபோல் முகத்தை வைத்துக் கொண்டு, "ஓகோ! நீ பெரிய நூத்துப் பாட்டி. பாவத்தையும் புண்ணியத்தையுங் கண்டுட்டே! போடி போ! ஒட்டசாண் சிறுக்கி என்ன கேள்வி கேக்கறெ....அதிகம் பேசினயானு ஒதைப்பேன். போயிடு" என்று மிரட்டி அவளைத் தள்ளியபடியே தன் வேலையைத் தொடர்ந்து செய்தார்.

இதற்குள் வேணி இனிமேல் இங்கு நிற்கக் கூடாது என்று எண்ணியவளாய் வெற்றிலை பாக்கு வாங்கிக் கொண்டு வெளியே வந்தாள். அப்போதுதான் கிழவர் அவளைத் தள்ளி விட்டதும்; வாஸந்தி சுவரோடு சுவராய் சாய்ந்து கொண்டு நின்றுள். வேணியின் மனம் புழுங்கியது. வாஸந்தியின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு தட தடவென்று நடந்தாள்.

கிழவர், வேணி வருவதையும் அவள் வாஸந்தியை அழைத்துச் சென்றதையும் பார்த்து அப்படியே சற்றுத் திகைத்து நின்று விட்டார். வேணியின் முக வசீகரமும் சாந்தமும் குங்குமப் பொட்டின் பிரகாசமும் அவளுடைய அழகை பதினுயிரம் மடங்கு அதிகரிக்கச் செய்து காட்டிய தோற்றம் கிழவரின் மனத்தில் ஓர் தீய எண்ணத்தின் சிறு தீப்பொறியைக் கிளப்பியதால் கண்மூடிக் கபோதியைப்போல் அவர் பல்லை இளித்துக் கொண்டும், விளக்கை அவித்த எண்ணெய்க் கையைத் தலையில் தடவியபடியே அசட்டுப் பார்வைப் பார்த்துக் கொண்டும் நின்றூர்.

வேணி இவர் செயலை யறியாது தான் வீடு செல்லும் நோக்கத்துடனேயே சென்றுள். "அந்த அம்மாளும் குழந்தையும் மனங் கலங்கும்படி நடந்து விட்டதே!" என்ற எண்ணத்தால்

மைதிலி வருத்தமுற்று, அவர்கள் செல்வதையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

இதற்குள் மீனாட்சி சிறுமியின் இயற்கையான சுபாவத்துடன் "வாஸந்திகா! நாளைக்கு எங்காத்துக்கு வரயா!" என்றாள். வாஸந்தி ஒருமாதிரியான பார்வையுடன், "போருமே! இன்னிக்கு தாதா இழுத்துத் தள்ளியதோடு விட்டார். நாளைக்கு வந்தாக்கா அடி அடின்னு அடிச்சி பிச்சிப்புடுவா. நான் வரலேடியம்மா!" என்று கூறி விசையாக இரண்டடி வைத்தாள்.

இதைக் கேட்ட கிழவர், "ஹி....ஹி........இதோ பாரு. கொழந்தெ! போகாதே! இங்கே வா....நான் அடிக்கமாட்டேன். அடீ மைலீ! அந்தம்மாளெ கூப்பிடுடீ! கூப்பிட்டு பக்ஷணங்கள்ளாம் கொடுத்தனுப்புடீ! அவா எஜமானருக்குக் காத்தாலே நேர்ந்துட்ட. விபத்துக்கு நான் ரொம்ப விசனப்பட்றதாகச் சொல்லுடீ! போராளே!....சீக்கிரம் கூப்பிடு" என்று கூறிக் கொண்டே அவரும் வீதிப்பக்கம் போனார்.

மைதிலி இந்த வார்த்தையைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. வேணியும் திரும்பிக்கூட பார்க்கவில்லை. வாஸந்தி மட்டும் திரும்பிப் பார்த்து நின்று, "தாதா! கார்த்தி விளக்குகள் எரிஞ்சா எண்ணெய் ஆய்பூடுதேன்னு அணைக்கிறேளே! பக்ஷணங் கொடுக்க ஓங்களுக்கா மனசு வரும்? வாண்டாம்; வாண்டாம். ஓங்க பக்ஷணமும் வாண்டாம். அடியும் வாண்டாம்" என்று கூறிக்கொண்டே ஓடிவிட்டாள். கிழவர் பல்லைப் பிளந்துகொண்டே வீதியில் நின்று பார்த்து பெருமூச்சு விட்டார்.

## 21

வேணிக்கு நேற்று கார்த்திகைப் பண்டிகை யன்று மைதிலியின் வீட்டில் தனக்கும் தன் மகளுக்கும் அவமானம் நேரிட்டதே என்ற மன வருத்தம் சற்று வேதனை செய்தது. எனினும் மைதிலியின் பால்வடிந்த முகத் தோற்றமும், அன்பின் வரவணைப்பும், அவள் கிழவனால் படும் துன்பமும் ஒன்றுகூடி வேணியின் வருத்தத்தைச் சற்று மாற்றுவதாயிற்று.

அதைப் பற்றியே மூர்த்தியுடன் பேசிக்கொண்டு துணிகளை உயர உள்ள கொடிகளில் காயவைத்துக் கொண்டிருந்தாள். வாஸந்தியும் ராஜுவும் தங்கள் பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தார்கள். மூர்த்தி மெல்ல எழுந்து சுவருடன் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தான்.

அச்சமயம் அவர்களின் உள் கதவு மெல்லத் திறக்கப் பட்டு கிழவர் தலையை மெதுவாக நீட்டினார். இதை முதலில் யாரும் கவனிக்கவில்லை. வேணி துணி உலர்த்திக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் சந்தோஷ உணர்ச்சி பொங்கிவிட்டதால் நாக்கை வெளியில் நீட்டி பல்லால் கடித்துக்கொண்டே வேணியைப் பார்த்துப் பிரம்மானந்தமடைந்து மீண்டும் தலையை வெளியே எடுத்துக்கொண்டார். மீண்டும் அதே மாதிரி செய்தார். அப்பொழுதும் இவரை யாரும் கவனிக்கவே இல்லை.

தானே தான் உள்ளே போகவேண்டும், தன்னை யாரும் பார்க்கவில்லை என்றதை யறிந்ததும் கிழவர் கதவை நன்றாகத் திறந்தார். அக் கதவு க்ரீச்சென்று ஓசை செய்ததும் வாஸந்தி ராஜு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். கிழவர் வெகு ஜோராயும் முடுக்காயும் உள்ளே வரும் வேகத்தில் வாசற்படி சாதாரண உயரமுள்ளதாதலால் படாரென்று தலையில் அபசகுனம் போல் இடித்ததும் முகத்தைச் சுணுக்கிக்கொண்டு, "இதென்ன சனியன்! வரும்போதே தலையிலிடிக்கிறது" என்று ஆத்திரத்துடன் வாசற்படியை முறைத்துப் பார்த்தார்.

அதே சமயம் ராஜூவும் வாஸந்தியும் கடகடவென்று சிரித்து விட்டதால் இச் சத்தத்தைக் கேட்டதும் வேணி திரும்பிப் பார்த்தாள். கிழவரைக் கண்டதும் வியப்பும், ஒரு மாதிரியான வெறுப்பும், ஆனல் பெரியவர் என்கிற மரியாதையும் ஒன்றுகூடியதால் கையிலுள்ள கம்பை மூலையில் வைத்துவிட்டு, தன் கணவனை ஜாடையாகப் பார்த்து கதவுப்பக்கம் கண்ணைக் காட்டிய பின் குழந்தைகளை நோக்கி பேசாமலிருக்கும்படி கண்ணாலேயே ஜாடை காட்டி மிரட்டியதோடு சற்று நகர்ந்து ஓரமாக நின்ருள்.

குழந்தைகளின் கணீரென்று ஒலிக்கும் வெங்கல மணி போன்ற குரலின் நகைப்பைக் கேட்டதும் கிழவரின் முகத்தில் அசடு தட்டுகிறது. அவமானக் களை தாண்டவமாடுகிறது. கையால் தலையைத் தடவியபடியே மெல்ல இரண்டடி எடுத்து வைத்தவாறு மூர்த்தியை நோக்கி, "ஹி....ஹி....நேத்து எங்க மாடாலெ ஓங்களுக்கு தலையிலே அடி. இன்னிக்கு அதுக்கு தண்டனை ஓங்க வாசப்படியாலெ என் தலையிலே கொஞ்சமாவது அடிபட்டது சந்தோஷந்தான். ஓங்களுக்கு ஒடம்பு எப்படி இருக்கு?" என்று கேட்டார்.

இதற்குள் மூர்த்தி தன் படுக்கையை இழுத்துக் கொண்டு கயிற்றுக் கட்டிலிலேயே ஒரு பக்கமாக உட்காரும்படிக் கூறினன். கிழவரும் தலையைத் தடவியபடியே உட்கார்ந்தார். கண்கள் மட்டும் வேணி இருக்கும் திக்கைத் தாவித் தாவி சுழலமிட்டு அலைகின்றன. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்றபடி கிழவரின் முக விகாரத்தின் ப்ரகாசம் தனியே ஜ்வலிக்கின்றது. "உம். ஓங்களண்டை நேத்திக்கே மன்னிப்பு கேக்க வர முடியலே. என் ஆமடயாளை அனுப்பினேன். இன்னிக்கித்தான் ஒழிஞ்சுது; மாடு புது மாடு. மன்னிக்கணும்" என்று வேணியைப் பார்த்துப் பல்லை இளித்தபடியே கூறினர்.

வேணிக்கு இப்பார்வையும் பல்லிளிப்பும் சற்றும் பிடிக்காமல், குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு, தட தட வென்று கொல்லைப்புறம் போய் விட்டாள். இச் செய்கை கிழவரின் மனத்தில் முள்போல் தைத்தது. ஆனல் அதை எப்படி காட்டிக் கொள்வது? மெல்ல அடக்கிக் கொண்டு, "ஹி! ஹி!

உமக்கு உடம்பு எப்படி இருக்குன்னு விசாரிக்கவே வந்தேன். உடம்பை ஜாக்கிரதையா பாத்துக்குங்கோ! நான் போயிட்டு வறேன். இந்தாம்மா கொழந்தே!" என்று வாஸந்தியைக் கூப்பிட்டார்.

வாஸந்தி இவரிடம் வருவதற்குப் பயந்து சற்றுத் தயங்கி நின்றாள். பிறகு இரண்டடி எடுத்து வைத்தபடியே, "ஏன் தாதா! இப்போ என்னைப் புடிச்சி தள்ளமாட்டேளே!" என்று குறும்பாகக் கேட்டாள். இச் சிறுசு தன்னைத் தாதாவென்று கூப்பிடும்போதெல்லாம் அவரை ஒரு தள்ளு தள்ளி ஆட்டுவது போலிருக்கிறது. முகத்தில் பதினாயிரம் கோணல் ஏற்பட்டுத் தன் உடம்பைத்தானே பார்த்துக் கொள்கிறார். அந்த உணர்ச்சியையும் அடக்கிக் கொண்டு, அசட்டுச் சிரிப்பு சிரித்தவாறு, "இந்தாம்மா! பயப்படாதே. ஒன்னெ நான் ஏன் தள்ளுவேன்? இந்தா ரூபா வாங்கிக்கோ!" என்று கூறிக் கொண்டே கிழவர் வாஸந்தியின் கையைப் பிடித்திழுக்க எழுந்தார்.

கயிற்றுக் கட்டிலின் காலில் கிழவருடைய வேஷ்டியின் கச்சம் மாட்டிக் கொண்டு அவரை ஓடாமல் தடுத்து இழுத்து காலில் மாட்டிக் கொண்டதால் சிறிய நர்த்தனம் செய்து சமாளித்துக் கொண்டு, மீண்டும் கட்டிலிலேயே உட்கார்ந்தார். வாஸந்தியும், ராஜுவும் கட கடவென்று சிரித்து விட்டார்கள். மூர்த்திக்கோ கிழவரின் ஒவ்வொரு உணர்ச்சியும் தெரியாமலில்லை. அவர் தன்னைச் சிறுபிள்ளையாக நினைத்திருப்பதைக் கான எப்படி நகைக்காமலும் பரிதாபப்படாமலும் இருக்க முடியும்?

மூர்த்தி எதுவுமே பேசவில்லை. "என் விதி, இம்மாதிரி அடி பட்டது" என்ற ஒரே வார்த்தையுடன் நின்று விட்டான். கிழவர் வாஸந்தியை அழைத்து, 5 ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டி, "இந்தா! இதை அம்மாவிடம் கொடுத்து, உனக்கு நல்ல பாவாடைகள் வாங்கித் தரச் சொல்லு." என்றார்.

வாஸந்தி அந்த நோட்டைப் பார்த்ததும் தேளைப்பார்ப்பது போல் வெறுத்தாளே யன்றிச் சற்றும் ஆசையே கொள்ளவில்லை. குழந்தை சுபாவத்துடன் சற்றும் பயமின்றி, "ஏன் தாதா! நேத்து சாமிக்காக ஏத்தின வளக்கெல்லாத்தையும் என்னெய் செலவாயிடும்னு பிசினாரித்தனமா அணைச்செளே! இப்போ ரூபாயே எப்படி தாதா குடுக்க உமக்கு மனசு வரும்? எங்களுக்கு வாண்

டாம். எனக்கு நெரய பாவாடை இருக்கு.” என்று கூறிவிட்டு, முகத்திலடித்ததுபோல் புத்தகத்தை வைத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்தாள்.

வேணி, கிழவர் போயிருப்பார் என்று எண்ணி குடத்துடன் உள்ளே வந்தாள். அப்போதும் அவர் அங்கே உட்கார்ந்திருப்பதைக் கண்டதும், திரும்பிப் பாராமல் அடுப்பங்கரைக்கு நேரே சென்ருள். கிழவர் இனிமேல் அங்கு இருப்பது மரியாதையல்லவென்று எண்ணியவராய் முன்போல் வேஷ்டி மாட்டிக்கொள்ளாமலிருக்கும் பொருட்டு வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டு எழுந்தார்.

“சார்! நான் போய் வருகிறேன். நீங்க கவலைப்பட வேண்டாம். நாளைக்கே குணமாயிடும். இதை வெச்சுக்கணும்” என்று மூர்த்தியிடம் அந்த நோட்டை நீட்டினர். மூர்த்தியும் மெல்ல நகைத்துக் கொண்டே, “ஐயா! ஒங்க தயவு இருந்தா போதும். இது இப்போ வாண்டாம். நேத்திக்கி ஒங்க மனைவி அனுப்பின மரியாதையே போரும். நீங்க செய்தா என்ன? அந்தம்மா செய்தா என்ன?” என்ருன்.

அதற்கு மேலும் கிழவருக்கு ஒன்றும் சொல்லமுடியவில்லையாதலால், “சரி நான் போய் வறேன்....அம்மா! நான் வறேன்” என்று வேணியைப் பார்த்துக் கூறினர். வேணியும் மரியாதையுடன் தலையை அசைத்தாள். இஞ்சி தின்ற குரங்குபோல் கிழவர் தலையில் இடிக்கப் போகின்றதே என்ற பயத்துடன் பாதி முதுகு வளையும்படிக் குனிந்து சென்ருர். இதைப் பார்த்த குழந்தைகளுக்கு, என் பெரியவர்களுக்குங் கூட, அடக்கமாட்டாத சிரிப்பு வந்துவிட்டது. கிழவர் திரும்பிப் பார்த்துக்கொண்டே மறைந்துவிட்டார்.

மூர்த்தி :—வேணீ! கிழவரின் அலங்காரத்தெ பாத்தையா!....

வேணி :—‘இந்தக் கிழத்தைப் பாத்தாலே எனக்குப் பத்தி எரியுறது. இப்படி மூளை கெட்ட கிழமும் உலகத்திலே இருக்கேன்னு சங்கடமா இருக்கு. அந்தப் பெண்ணின் பாவந்தான் இப்படி கிழத்தின் ரூபமாயிருக்கு’—என்று மைதிலியை எண்ணிக் கலங்கினள்.

## 22

தொத்து வியாதி ஓரிடத்தில் பரவ வாரம்பித்தால் அது எப்படி எல்லோரையும் பீடிக்குமோ, நெருப்பு ஓர் இடத்தில் பிடித்துக்கொண்டால் அது எவ்விதம் நெடுக பஸ்மமாக்கிவிடுமோ, வெள்ளம் ஆரம்பித்தால் எப்படி பெரும் வேகத்துடன் தங்காது ஓடுமோ அம்மாதிரியே கிழவரின் புத்தியில் தோய்ந்து ஊறிவிட்ட மோக எண்ணம் காட்டுத் தீயைப் போல் வளர வாரம்பித்தது. நல்ல எண்ணங்களும், நல்ல சகவாஸமும் விருத்தியாவதற்கு வேண்டுமானுல் மிகவும் கஷ்டம். தீய எண்ணங்கள் தீய காரியங்கள், 'தீய' என்ற பதம்போலவே தீயினும் வேகமாக விருத்தியாகிவிடக் கேட்கவேண்டுமா?

இந்த அக்கிரம எண்ணத்தை உத்தம தம்பதிகள் எங்ஙனம் அறியக்கூடும்? அல்லது பரிசுத்தவதியான மைதிலிதான் எவ்வாறு அறிவாள்? வேணியிடமும், வாஸந்தியிடமும் கொண்ட ஓர் வாஞ்சையினுல் மைதிலி தன் துயரம் சற்று மறையும்பொருட்டு, வேணியின் வீட்டிற்குச் செல்வதும், அவளுடன் சத் விஷயமாகவே பேசுவதும், மனத்திற்கு ஆறுதல் அடைவதுமாக விருந்தாள்.

கிழவரோ உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிய வாறு மூர்த்தியை க்ஷேமம் விசாரிக்கும் முறையிலும் குழந்தைகளுடன் பேசிக் குலாவும் முறையிலும் தினம் ஒரு வேளையாவது அங்கு வருவதும், குழந்தைகளுக்குத் தின்பண்டங்களை வாங்கிக் கொடுப்பதும், தனக்குத் தாகம் 'தீர்த்தம் வேண்டும்; மோர் வேண்டும்; வெற்றிலைப் பாக்கு வேண்டும்' என்றெல்லாம் கேட்பதுமாக வாரம்பித்தார்.

இச்செய்கையின் உள் மர்மத்தையறியாத மூர்த்தி, 'இக் கிழவர் மிகவும் வெகுளி' என்று எண்ணி, அவருடன் பேசுவதும் அவர் கேட்பதைக் கொடுப்பதுமாக வாரம்பித்தான். மைதிலி வருவது கிழவருக்குத் தெரியாது. கிழவர் செல்வது மைதிலிக்குத் தெரியாது. வேணிக்கு மட்டும் கிழவரைப் பார்க்கவே பிடிக்காது ஒருவித வெறுப்பும், எரிச்சலும் ஆதிமுதலே பாதித்துக்கொண்டு

வந்தது. அதன் காரணம், மைதிலியின் வாழ்க்கையைக் கிழவன் கண்மூடித்தனமாகப் பாழ்ப்படுத்திவிட்டானே என்ற பரிதாபமே முதன்மையா யிருந்தது.

ஒரு தினம் மைதிலி வழக்கம்போல் வேணியின் வீட்டிற்கு வந்தாள். குழந்தைகள் பள்ளிக்கூடம் போய்விட்டன. மூர்த்தி எங்கோ வெளியில் சென்றிருந்தான். அச்சமயம் வேணி மட்டும் பழைய நோட்டுப் புத்தகம் ஒன்றைப் பார்த்து,

"வாத்ஸல்யாத் அபயப்ரதாந கரணத் ஆர்த்தார்த்தி நிர்வாபணத்
ஒளதார்யாத் அகமர்ஷணத் அகணித ச்ரேயப் பதப்ராபணத்"

என்ற ச்லோகத்தை ராகத்துடன் படித்துக்கொண்டிருந்தாள். மைதிலி குறுநகை புரிந்தவாறு, "ஆமாம்! பகவானின் லீலா விநோதங்களைப் படித்து இன்புறப் புகுந்தால், உலகமே மறந்து போகிறது. அதை நினைக்காமல், என் விதியை மட்டும் நினைத்தால், 'பகவானே மோசம்; ஹம்பக்கு; கருணையில்லாத வெறும் பொம்மை. எந்தப் பக்தரைக் காத்தாலென்ன? எனக்கு என்ன வாச்சு?' என்ற அகங்காரந்தான் உண்டாகிறது" என்று கூறிக் கொண்டே உள்ளே சென்று உட்கார்ந்தாள்.

**யா**ரையும் முதல் முதல் பார்க்கும்போது வெகு மரியாதை. பேசவும் தெரியாத—முடியாத—சங்கோசம். கேட்டதற்குப் பதில், மாமி! அக்கா! அத்தை வாங்கோ, போங்கோ முதலிய அழைப்பு பரிபாஷை ப்ரயோகம். சில நாள் பழகின பிறகு தானே கூப்பிட்டுப் பேசும் பழக்கம். சிநேகத்திற்குத் தக்க பாத்திரமாக இருந்து முதல் சந்திப்பிலேயே ஓர் பற்றுதல் உண்டாகி மனம் ஒன்றுகிவிட்ட பிறகோ, மரியாதை முற்றும் பாலில் கலந்த சர்க் கரையைப்போல் அன்பிற் கலந்த சிநேகத்துடன் உருவம் மாறி, வாம்மா! வாடியம்மா! என்னருமைச் சிநேகிதையே....கண்ணா! முதலிய ஸ்வாதந்தர்ய மொழிகளையே சம்பாஷிக்கும் நிலைமை உண்டாகி விடுகிறது.

**ம**னத்திற்குப் பிடிக்காத மனிதர்களாயின், அவர்களை அடிக் கடி பார்த்தாலும் மாமி முறையும், வாங்கோ போங்கோ பேச்சும், கேட்டதற்குப் பதிலும், சில சமயம் சிலரிடம் அதுவும் இல்லாது மெல்ல மெல்ல தேய்பிறைத் திங்கள்போல் தேய்ந்தும் போய் விடுகின்றது. சிநேகம் முதிர்வதற்கும் ஏக வசனமாக மனங்

கலந்து பேசுவதற்கும் நம்மை யறியாத ஓர் தனித்த அன்பும் ஆர்வமும் மனத்தில் பொங்கி எழுந்தாலன்றி அச் சிநேகம் நிலைக்காது. அப்படி மனமொத்து லயித்துப் போன சிநேகம் கால வித்யாசத்தினால் பிரிந்து போகும்படி நேரிட்டு விடினும் உள்ளுக்குள் ஆழமாகப் பதிந்து போய்விட்ட உணர்ச்சி, மனத்துள் தேங்கிக் கிடக்கும் அன்பு ஒருபோதும் அகல முடியாது. நினைக்கும் போதெல்லாம் ஒரு ஷாக் அடித்தே மறையும். சில சமயம் ஒரு பொட்டுக் கண்ணீரும் பெருகும். இத்தகைய மாற்றிலாத உண்மையான அன்பிற்கே பூர்வஜன்மத்து பந்தம் என்கிறார்கள்.

வேணியும் மைதிலியும் மேற் குறிக்கப்பட்ட ஐக்ய பாவத்துடன் சிநேகிதைகளாகி விட்டதால், 'வாம்மா' என்ற ஏக வசன ப்ரயோகம் வெகு விரைவிலேயே உண்டாகி விட்டது. முக மலர்ச்சியுடன் வேணி மைதிலியை முதுகில் தடவிக் கொடுத்தபடியே நகைத்துக் கொண்டு, "நாம் செய்த விபரீதமான கர்மத்திற்குக் கடவுள் என்ன செய்வார்? அவர் மேலே பழி போட்டுத் திட்டி இன்னும் பாவத்தை மூட்டைதான் கட்டிக்கணும். இந்த சுலோகத்தில் பகவானின் ஆறு விதமான குணங்களையும் ஆறு பக்தர்களின் மூலம் விரிவாகச் சொல்லி இருக்கு. அந்தப் பக்தாளைப்போல நாமும் இடை விடாமே பகவானை பஜித்தா நமக்குக் கருணை செய்யாமலா இருப்பார்? அந்தக் குறை நம்மிடமே இருக்கச்சே பகவானை சொல்லி உபயோகமென்ன?" என்றாள்.

மைதிலி.—ஆமாம்; வேணி! எல்லா வேதாந்தமும் எனக்குத் தெரியும். நானுந்தான் நாள் முழுக்கக்கூட சொல்லுவேன். சொந்தத்திற்கு என்னவாச்சு! இன்னிக்குப் பாரு ஒரு வேடிக்கை. கிழவரின் மூத்த மனைவியோடெ தம்பி ஊரிலிருந்து வந்திருக்கான். அவனை நான் இதுவரையிலெ பார்த்ததெ இல்லெ. எங்கேயோ கல்கத்தாவிலே இருக்கானாம். அவன் இன்று மருமாக்களை பார்க்க வந்தான். ஒரு மனுஷன் நம் வீட்டுக்கு வந்தா, அவன் நம்மை விசாரிச்சா, நாமும் பதில் சொல்லணுமா இல்லையா? அப்படி அவன் ஏதோ விசாரிச்சான். என்னை பாத்தாதான் எல்லோருக்கும் பாழாப்போன அழுகை வந்துட்றது. என்னைக் கண்டதும் 'ஐயோ! ச்ச்ச்சு!' என்று சொல்லி விட்டான்.

கிழவருக்குப் பெரிய சந்தேகப் பிசாசு உள்ளே பூந்துண்டு ஆட ஆரம்பிச்சுடுத்து. உள்ளே வந்து என்னைக் கன்னாபின்னான்னு

திட்டி, "உனக்கென்ன அவனோடே பேச்சு? இனுமே அவன் எதிரே வா பாக்கலாம்னு, வசுவோடெ ஒதையும் குடுத்தார். தன் மகனைக் கூப்பிட்டு, ஒங்க மாமாவெ சீக்கிரம் ஊருக்குப் போகச் சொல்லு. இங்கென்ன காரியம்னு உபதேசம் பண்ணார்.

ஊரிலிருந்து வந்தவாளெ அப்படி சொல்றது அழகில்லெ. நாளைக்கி எனையாதான் இப்படி சொல்லச் சொன்னான்னு என் தலையே உருட்டுவா. நீ ஒன்னும் சொல்லாதேயப்பான்னு நான் சொல்லிப்புட்டேன். அவ்வளவுதான். இன்னும் கோபம் வந்து விபரீதமாக் கூச்சல் போட்டார். அவன் வரட்டும் நானே வெறட்டிப் புட்ரேன். அவன் எதிரே தலெ காட்டு சொல்றேன்; ஒன்னெ கொண்ணுபுட்ரேன்னு என்னை பிடித்து இழுத்து உள்ளே தள்ளி, கதவெத் தாளிட்டுண்டுப் போயிட்டார்.

விதியை எண்ண எண்ண என்னை நானே தற்கொலை ஏன் செய்துக்கக் கூடாதுன்னு ஒரு வெறியும் பிடிச்சுக் கலங்கினேன். தற்கொலையின் பாவத்தை எண்ணி சற்று அடங்கினேன். வண்டிக் காரக் கரப்பனும்,மீனுவும் கிழவரோடெ சண்டே போட்டுக் கதவெ திறந்தா. நான் அப்பவும் வெளியே வரவே இல்லே. எத்தனை நாழிதான் அழுதுண்டே படுத்திருக்கறது. பசங்க பள்ளிக்கூடம் போயிட்டா. கிழவர் மருந்து கேட்லாக்குகளெ பார்க்க எதிர்த்த வீட்டு கிழவரோடெ போயிட்டார். எனக்குப் பயித்தியம் புடிச் சுடும்போலெ இருந்தது. எழுந்து வந்துட்டேன். காத்தாலெ பல் தேச்சதோடெ சரி. இன்னிக்கு முழு பட்டினி போட்டு ஏகாதசியாவது கொண்டாடலாம்னு இருக்கேன். எத்தனை இம் சையும் சகிக்கலாம். மனுஷனுக்குச் சந்தேகப் பிசாசு பிடிச்சுட்டா அந்த அவஸ்தெயெ எப்படிதான் பொறுக்கறது வேணி!"—என்று கூறும்போது கண்ணீர் ஆறாய்ப் பெருகிவிட்டது.

வேணிக்கும் தாங்க முடியாத விசனம் பொங்கிவிட்டது. "ஐயோ! நெருப்பெ ஈ, எறும்பு மொய்க்கிறதுங்கராப்லே இருக்கே ஒன்னெ சந்தேகப்பட்ரது. மைதிலீ! பட்டினியாகவா இருக்கே? அம்மா! எம் மனசு சகிக்கலேடீ! நான் உனக்குக் கூடப் பிறந்த வளாட்டும் எண்ணிண்டு ஒரு உருண்டெ சாதம் சாப்பிடும்மா! ஏகாதசி நேத்திக்குப் போச்சு" என்று கூறிக்கொண்டே எழுந்து சென்று இலையைப் போட்டுப் பரிமாறிவிட்டு, அன்பு ததும்ப மைதிலியின் கையைப் பிடித்து இழுத்துவந்து, இலைமுன் உட்கார வைத்தாள்.

வேணியின் கரை காணாத அன்பின் அமுதைத் தட்டச் சக்தியற்ற மைதிலி மெல்ல எழுந்துபோய், இலையில் உட்கார்ந்து சாப்பிட வாரம்பித்தாள்.

வேணி :—மைதிலீ! ஏதோ ஏழையின் வீட்டுச் சாப்பாடு. ருசிக்குமோ ருசிக்காதோ! அன்புதான் பிரதானம். விருந்து செய்ரது ஒன்னும் பிரதானமில்லெ.

இந்த வார்த்தைக்கு மைதிலியால் பதில் சொல்லவே முடியவில்லை. ஏழைக் குடும்பத்தின் ஒற்றுமையும், ருசியாயும் ஆரோக்யமாயும் இருக்கும் சாப்பாடும் அவளைப் பரவசமுறச் செய்தன. "வேணீ! கடலில் வற்றாத நீர் அலை மோதிச் சென்றாலும் அதை ஒரு கையாவது அள்ளிக் குடிக்க முடியுமா? சிறிய ஓடையாயினும் அதன் நீரல்லவோ கரும்பின் சாறுபோல் மக்களுக்கு உதவுகிறது. அதுபோலத்தான் என் செல்வமும் வாழ்க்கையும்" என்று கூறிக் கண்ணீர் உதிர்த்தபடியே, உண்மையில் பசியின் கொடுமையால் பூர்ண திருப்தியுடனும் ப்ரீதியுடனும் சாப்பிட்டாள்.

அச்சமயம் அவ்வறையின் வெளியில் யாரோ வரும் சப்தம் கேட்டு, வேணி உற்றுக் கவனித்தாள். "அம்மா! உள்ளே வரலாமா!" என்ற ஒரு குரல் மிகவும் வணக்கமாகக் கேட்டதும், வேணி கதவைத் திறந்தாள். அழகே உருக்கொண்ட வீர வாலிபன் ஒருவன் வெகு மரியாதையுடன் உள்ளே வந்தான்; மைதிலி சாப்பிடுவதைக்கண்டதும் அவனைமீறி அவன் கண்களில் ஜலம் ததும்பி விட்டது.

"அம்மணீ! சாப்பிடும்போது நமஸ்காரம் செய்யப்படாது. என்னால் ஒங்களுக்கு நேர்ந்த தண்டனையை முத்துசாமி மூலம் தெரிஞ்சு என் மனசு நெருப்பில் விழுந்த புழுபோலத் துடிக்கிறது. நான் ரொம்ப சகஜமாய் அங்கே வந்ததுக்குப் பலன் ஒங்க தலெலே வெடியும்னு தெரிஞ்சா நான் முதல்லெயே ஓட்டலில் எறங்கி இருப்பேன். என் முட்டாள்தனத்தாலே நான் வந்ததும், ஒங்களுக்கு இந்தமாதிரி தண்டனே கிடைச்சதும் என் மனசை அறுக்கிறது. அம்மா! என்னை மன்னிக்கணும். நான் இப்பவே போறேன். என் மேல் கோபப்படக்கூடாது. நீங்க இங்கே போயிருக்கிறதாக கருப்பன் சொன்னான். அவனிடம் விலாசங் கேட்டுண்டு இங்கு வந்து ஒங்களிடம் மன்னிப்பு வாங்கிண்டு ஊருக்குப் போகவே வந்தேன்" என்று விசனத்துடன் கூறினான். அவன் முகத்தில் பரிதாபக் களை தாண்டவமாடியது.

மைதிலி இம்மாதிரி இவன் வருவான் என்று கனவிலும் நினைக்கவில்லை யாதலால், அவனைப் பார்த்ததும் மைதிலிக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அவளால் தாங்க முடியாத விசனத்தைக் கிளறி விட்டது போலாகி விட்டது. பதில் பேச வாயை எத்தனை தரம் எடுத்தும் முடியாது துக்கம் தொண்டையைப் பிடித்து இறுக்குகிறது. கையில் எடுத்த

சாப்பாடும் அப்படியே நின்று விட்டது. தன்னுடைய கர்மம் எத்தனை பேரை ஆட்டுகிறது. ஈசா! என்ற ஒரே எண்ணம் அவளை வாட்டுகிறது. கையை அப்படியே உதறிவிட்டு, கண்ணீர் கன்னத்து வழியே பெருகி வழிந்தவாறு, "ஐயோ! இந்த மகா பாவியினாலே நல்ல மனுஷாளான ஒங்க மனசு நோகும்படி நேர்ந்து விட்டது என்னுயிரையே வதைக்கிறது. எல்லாம் என் விதி; ஒத்தர் மேலெயும் குத்தமே இல்லே. நீங்க இத்தனை தூர தேசம் வந்தும் இந்த மாதிரி அவமானமும், அபவாதமும் என்னால் ஏற்பட்டதற்கு என்னை மன்னிக்கணும்" என்று மேலே கூற மாட்டாமல், தலையைக் குனிந்து கொண்டு பூமியை நோக்கினாள். கண்ணீர் மணிகள் உருண்டு விழுந்து சிதறின.

அதே சமயம் அட்டகாஸமாயும் ஆநந்த நகைப்புடனும் ஏதோ ராகத்தைப் பாட்டாக இழுத்துப் பாடிக் கொண்டே கிழவர், 'மூர்த்திவாள்!' என்று கூப்பிட்டபடியே உள்ளே பிரசன்னமானார். இவரைக் கண்டதும் எமனையே நேரில் பார்ப்பது போல் மைதிலிக்கும், அந்த மனிதனுக்கும் தூக்கி வாரிப் போட்டது. வேணிக்கோ ஆகாயமும், பூமியும் சுழலுகின்றன. கிழவர், இங்கு நிற்கும் வேணுசாமியையும் மைதிலியையும் பார்த்து விட்டதுதான் தாமதம்! கண்கள் நெருப்புப் பொறியாகி சிவந்து ஜ்வாலை வீசுகின்றன. தேகம் முற்றும் பதட்டத்துடன் ரோமம் துடிக்க வாரம்பித்தது........அந்தோ! இந்த விபரீதத்தினால் என்ன விபத்து நேருமோ? என்ன ப்ரளயம் வந்து விடுமோ? என்ற பெருந் திகில் மைதிலியின் அடி வயிற்றில் இடி இடித்த தால், அப்படியே சுவருடன் சாய்ந்தாள்.

அதே சமயம் வழக்கமாக என்றாவது ஒரு தினம் கேட்கும் கந்தர்வ கானத்தின் இன்னொலி மாதுர்யமாய் வானக்குயில் பாடுவதுபோல் கேட்டது.

JL
N22 N38 15.2

(முன்பு பாடிய பாடலின் மெட்டு; தொடர்ச்சி: சரணம்.)

பாலே வனத்தினில் பதறித் துடிக்கினும்
காலக் கூத்தனின் கொடுமையால் கதறினும்
மாலின் பதம் மறவேல். (தூய்மையினாலே)

இந்த இன்னிசை கீதாம்ருதத்தில் மைதிலி அப்படியே ஐக்ய மாகி விட்டாள். வேணியும் இந்த அபூர்வ கானத்தின் இன்ப வாரிதியில் ஆழ்ந்தாள்.

182016

எப்பொழுது வரப்போகிறது?

என்பதே எல்லோருடைய ஆவல்!

பொறுங்கள் ஸார்!

கூடிய விரைவில் வரப்போகிறது

பக்த

# நாமதேவர்

தமிழ்ப் படம்

துருபத்ராய் அவர்களால் வெகு திறமையாக டைரெக்ட் செய்யப்பட்டது.

தென்னிந்திய தவ நடிகர்கள் ஒன்று கூடி நடித்தது.

மாடர்ன் தியேட்டர்ஸில்

தயாரிக்கப்பட்டது.

தயாரித்தவர்கள்:

ஸ்ரீ சௌடேச்வரி பிலிம்ஸ் லிமிடெட்,

சேலம் ஜங்ஷன்.

"JAGANMOHINI". Vol. XV No. 2 Regd. No. M. 2210



தலை வலிக்கு

# Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்




அம்ருதாஞ்சனை

உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,

சென்னை கல்கத்தா பம்பாய்

Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St, Triplicane, Madras.